கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™ • VLAMBARAM™

Canada's Oldest Tamil Newspaper

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
Office: 416.321.6969 Fax: 416.321.6963
www.divhomes.com

35ஆவது ஆண்டில்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்
VLAMBARAM

email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 35 பாலம்: 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2025

# அமெரிக்க அதிபரானார் டொனால்ட் டிரம்ப்

அமெரிக்காவின் 47ஆவது அதிபராக டொனால்ட் டிரம்ப் 2025 ஜனவரி 20ஆம் திகதி பதவி ஏற்றார். இது அமெரிக்க அதிபரின் 60ஆவது பதவி ஏற்பு வைபவம் ஆகும். அத்துடன் இது டொனால்ட் டிரம்ப்பினுடைய இரண்டாவது அதிபர் பதவியேற்பு வைபவம் என்பதும் குறிப்பிடத் தக்கது. இவரின் முதலாவது பதவியேற்பு வைபவம் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 2017 ஜனவரியில் நடந்தது. அடுத்தடுத்து தொடர்ச்சியாக ஒருவர் அமெரிக்க அதிபராக வராமல் இடையில் வேறொருவர் அமெரிக்க அதிபர் பதவி வகித்து மீண்டும் முன்னையவர் அதிபராகப் பதவியேற்பது அமெரிக்காவில் நடப்பது இம்முறை இரண்டாவது தடவை யாகும். 1893ஆம் ஆண்டில் குரோவர் கிளீவ்லண்ட் (Grover Cleveland) அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பின்னர் தற்போது டொனால்ட் டிரம்ப் இவ்வாறு இடையில் வேறு ஒருவர் அமெரிக்க அதிபராக இருந்த பின்னர் மீண்டும் அமெரிக்க அதிபராகியுள்ளார்.

அமெரிக்க அதிபர் பதவியேற்கும் வைபவம் 'அமெரிக்க கப்பிட்டலின்' (US Capitol) மேற்குப்புறமுள்ள அழகிய புல் வெளியில் தற்காலிக மேடை அமைத்து நடைபெறுவது வழக்கம். இம்முறை ஜனவரி 20ஆம் திகதி உறைபனி வெப்ப நிலையும், அதிக காற்று வீசும் காலநிலை வெளியில் நிலவுமென வானிலைமையம் அறிவித்ததால் அமெரிக்க அதிபர் பதவியேற்பு வைபவம் உள்ளக அரங்கில் நடைபெற்றது.

டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபராகப் பதவியேற்கும் வைபவம் அமெரிக்க கப்பிட்டலின் வட்டவடிவ குவிந்த கூரையுள்ள உள்ளக அரங்கில் (Rotunda) நடைபெற்றது. 1985ஆம் ஆண்டில் றொனால்ட் றீகன் (Ronald Reagan) அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற வைபவமும் உள்ளக அரங்கில் தான் நடைபெற்றது. அதன்பின்னர் இதுவே உள்ளக அரங்கில் நடைபெற்ற அமெரிக்க அதிபர் பதவியேற்பு வைபவம்.

அமெரிக்க அதிபர் பதவியேற்பு வைபவத்தில் சத்தியப்பிரமாணம் செய்தல், கையொப்பம் இடுதல், முதல் இராணுவ அணிவகுப்பு மரியாதை நிகழ்வு பின்னர் 'கப்பிற்றல் வண்' அரங்கில் (Capital One Arena) ஊர்வலம் மற்றும் நடன நிகழ்வும் (Inaugural balls) நடைபெற்றன.

அமெரிக்க அதிபர் பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு வோஷிங்டன் டி.சி. (Washington D.C)இல் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. 8,000 தேசிய காவலர்களுக்குப் (National Guard Soldiers) பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டு தேசிய தலைநகர் பிராந்தியத்தில் நகர்காவலர் பதவியில் ஈடுபடுத்தப்பட்டனர்.



President-elect Donald Trump takes the oath of office. Thanks: Wikipedia

இம்முறை அமெரிக்க அதிபர் பதவி ஏற்கும் வைபவத்திற்கு அமெரிக்க வரலாற்றிலேயே முதல் தடவையாக வெளிநாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அத்துடன் சில வெளிநாடுகளின் தீவிர வலதுசாரிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

ஆஜன்ரீனா அதிபர், Ecuador அதிபர், Paraguca அதிபர் மற்றும் டிரம்ப்பினு டைய மகனின் நண்பனான El Salvador அதிபர் ஆகியோர் இவ்விழாவிற்கு சமூக மளித்திருந்தனர். சீன அதிபரின் பிரதிநிதி யாக சீன உபஅதிபரும், இந்தியப் பிரதம ரின் பிரதிநிதியாக இந்திய வெளி விவகார அமைச்சர் S. ஜெய்சங்கரும், அவுஸ்ரேலி யாவின் பிரதிநிதியாக அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சரும், ஜப்பானின் பிரதிநிதியாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரும் இவ்விழாவில் பங்கு பற்றியிருந்தனர்.

ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் அதிபர்களுக்கு இவ்விழாவில் பங்குபற்ற அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆனால், அந்நாடு களின் தீவிர வலதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் இவ்விழாவில் பங்குபற்றி இருந்தனர்.

பதவி விலகிச்செல்லும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் பதவி விலகிச் செல்லும் அமெரிக்க உப அதிபர் கமலா ஹாரிஸ் உட்பட முன்னாள் அமெரிக்க அதிபர்களான பில் கிளிண்டன், ஜோர்ஜ் W. புஷ், பராக் ஒபாமா, முன்னாள் அமெரிக்க முதற் பெண்மணிகளான ஹிலாரி கிளிண்டன், லோரா புஷ் ஆகியோரும் இந்தப் புதிய அதிபர் பதவி ஏற்பு விழாவில் பங்குபற்றினர்.

புதிய அதிபரின் பதவியேற்பு விழாவின் முதல் நிகழ்வாக 2025 ஜனவரி 19ஆம் திகதி காலை டொனால்ட் டிரம்ப் மற்றும் J.D. வான்ஸ் ஆர்லிங்டன் தேசிய கல்லறைக்குச் சென்று அங்குள்ள 'அறியப்படாத போர் வீரன்'இன் கல்லறைக்கு (Unknown Soldier) மலர்வளையம் சாத்தினர்.

பின்னர் அன்றைய தினம் மாலை வோஷிங்டன் டி.சி.யில் உள்ள 'கப்பிற்றல் வண்' அரங்கில் டொனால்ட் டிரம்ப் இனுடைய ஆதரவாளர்களுக்காக ஒரு பேரணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கிட் றொக் (Kid Rock) மற்றும் லீ கிறீன்வூட் (Lee Greenwood) ஆகியோ ரின் பாட்டு நிகழ்வுகளும், ஊடகவியலாள ரும், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப் பாளருமான மெகின் கெல்லி (Megyn Kelly)இன் உரையும் நடைபெற்றது. டொனால்ட் டிரம்ப் இப்பேரணியில் தனது ஆதரவாளர்களுக்கு உரை நிகழ்த்தினார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் பதவியேற்கும் வைபவத்திற்குப் பின்னரும் முதல் நாளும் நடைபெறும் நிகழ்வுகளுக்கு செலவழிக்க இந்நிகழ்வுகளை மேற்பார்வை செய்யும் குழு $170 மில்லியனை இம்முறை சேகரித்திருந்தது. கடந்த முறை டொனால்ட் டிரம்ப் பதவி ஏற்பு நிகழ்வுகளுக்கு $107 மில்லியன் செலவழிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் சத்தியப்பிரமாணம் செய்து கையொப்பமிடும் நிகழ்விற்கு மட்டுமே அரசபணம் செலவு செய்யப்படும். ஏனைய பதவியேற்பு நிகழ்வுகளுக்கு அமெரிக்க அதிபரே பணத்தை செலவு செய்வார்.

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற விழாவில் நிகழ்வுகளை நடத்த, அதை மேற்பார்வை செய்யும் குழுவிற்கு அமெரிக்காவின் கோடீஸ்வரர் களான 'Open AI' நிறுவன நிறை வேற்று அதிகாரியான Sam Altman, 'Meta' நிறுவன அதிபரான Mark Zuckerberg, 'Uber' நிறுவன அதிபர் Dara Khosrowshahi ஆகியோரும் 'Ford' மோட்டார் வாகன நிறுவனம், 'General Motors' வாகன நிறுவனங் களும் தனித்தனியே $1 மில்லியனை வழங்கியிருந்தன.

'Amazon' நிறுவன நிறைவேற்று அதிகாரியான Jeff Bezos தனது நிறுவனம் டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபராக பதவியேற்கும் நிகழ்வுகளை நேரலையில் 'Amazon Prime Video' ஒளிபரப்புவதாக உறுதி அளித்திருந்தார். இதுவும் $1 மில்லியன் நிதி உதவி வழங்கியதற்குச் சமமாகுமென ஊடகங்கள் தெரிவித்தன.

வோஷிங்டன் பல்கலைக்கழகத்தின் சிலிக் கான் பள்ளத்தாக்கு வரலாற்று ஆசிரியரான மார்க்கரெட் ஓமரா ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், இந்த நன்கொடைகளில் சில தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்கள் கடந்த காலங்களில் டொனால்ட் டிரம்ப்உடன் முரண்பட்டதால் அவரின் புதிய நிர்வாகம் தங்களது நிறுவனங்களின்மீது தீவிர ஒழுங்குமுறை அழுத்தத்தைப் (Regulatory Pressure) பிரயோகிப்பதைக் குறைக்கும் என்ற நம்பிக்கையில் வழங்கப்பட்ட நன்கொடைக ளாகும் என்றார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate Insurance

HOMELIFE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
*Independently Owned & Operated
TRUTH BUILDS TRUST

Vlambaram - February 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-31 6:32 PM Page 2



| RENT | BUY | SELL | INVEST | LEASE |
|---|---|---|---|---|

# In CANADA from anywhere in the world

- Respectable Real Estate Brokerage based in Toronto
- Over 20 Years in the business
- Over 150 Sales Representatives.
- Brokers combined experience over 50 Years
- Well connected with Builders, Developers, Mortgage Brokers, Home Inspectors, Insurers ....





For
more information
Feel Free
to call or
visit to
www.hlgtarealty.com



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

## MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

Vlambaram - February 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-31 6:32 PM Page 4



# தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள்

## – அரவின் –

இலங்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர், பிரச்சினைகள் புதிது புதிதாக முளைக்கத் தொடங்கியிருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் சாதாரண மக்களின் வயிற்றில் அடிக்கின்ற பிரச்சினைகளாக இருப்பதுதான், பிரச்சினைக்குரிய விடயம்.

இவற்றைக் கையாளும் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு, போதிய அனுபவம் இல்லாமை முக்கியமானதொரு குறைபாடாக இருக்கிறது.

நாட்டில் மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உரியது. ஆனால், அரசாங்கம் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதில், எந்தளவுக்கு கவனம் செலுத்தி இருக்கிறது என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது.

ஜனவரி முதலாம் திகதி கிளீன் ஸ்ரீலங்கா என்ற வேலைத்திட்டம் தொடங்கப்பட்ட போதும், அதனைச் சரியாக செயல்படுத்துவதற்கான எந்த உபாயங்களும் வகுக்கப்படாத நிலையில், அதன் இலக்கு தொடர்பாக இன்னமும் குழப்பங்கள் நிலவிக் கொண்டிருக்கின்றன.

அத்துடன், பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளும், மிகத் தெளிவான முறையில், முன்னெடுக்கப்படவில்லை.

இந்திய, சீனப் பயணங்களின்மூலம், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சில வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டிருந்தாலும், அது ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் சீர்படுத்துவதற்குப் போதுமானதல்ல. அத்துடன், புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறாக, பிரதான பிரச்சினைகளின் மீது அரசாங்கம் இன்னமும் கவனம் செலுத்தாத நிலையில், அடிப்படைப் பிரச்சினைகள் கழுத்தை நெரிக்கத் தொடங்கியிருக்கின்றன.



முதலில் அரிசிப் பிரச்சினை தொடங்கியது. பின்னர் உப்புப் பிரச்சினை தொடங்கியது. இப்பொழுது தேங்காய்ப் பிரச்சினை தீவிரம் அடைந்திருக்கிறது. அரிசி, உப்பு, தேங்காய் - இந்த மூன்றும் இலங்கை மக்களின் உணவுப் பாரம்பரியத்துடன் பின்னிப் பிணைந்தவை.

இவை பிரதான உணவுப் பொருட்களின் தயாரிப்புக்கு முக்கியமானவை, தவிர்க்க இயலாதவை. ஆனால், இந்த மூன்றினதும் விலைகள் அதிகரித்து, தட்டுப்பாடான நிலை காணப்படுகிறது.

இந்த மூன்று பொருட்களினது விநியோகமும் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதுதான், அரசாங்கத்துக்கு உள்ள சவால்.

அரிசிப் பிரச்சினை தொடங்கி சில மாதங்கள் ஆகிவிட்டன. அதற்கு இன்னமும் தீர்வை வழங்க முடியாத நிலையில், அரசாங்கம் இருக்கிறது.

அரிசி விலை அதிகரித்து, தட்டுப்பாடு ஏற்பட்டபோது கட்டுப்பாட்டு விலையின் மூலம் அதனை தீர்க்க முயற்சிக்கப்பட்டது.

அதில் அரசாங்கம் தோல்வியடைந்த நிலையில், அரிசி விலை 300 ரூபாயைத் தொட்டது.

உடனடியாக இறக்குமதிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒன்றரை இலட்சம் மெட்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்ட போதும், உள்ளூர் சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் நீடிக்கிறது.

தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு, இறக்குமதி செய்யப்பட்ட அரிசி எங்கே போனது? ஏன் விலை குறையவில்லை? என்று இறக்குமதியாளர்களின் கழுத்தை அரசாங்கம் நெரிக்கவில்லை. இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு கிலோ அரிசிக்கும் அரசாங்கம் 65 ரூபாய் வரியாக அறவிட்டது. இதன்மூலம் மாத்திரம், 10 பில்லியன் ரூபாவுக்குமேல், அரசாங்கத்துக்கு வரி வருமானம் கிடைத்தது. அதனால் இறக்குமதியாளர்களை விட்டுவிட்டு, உள்ளூர் அரிசி ஆலை உரிமையாளர்களின் கழுத்தை நெரிக்கும் வேலையில் அரசாங்கம் இறங்கி இருக்கிறது.

கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க இணங்காவிட்டால், அரிசி ஆலைகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம் என்றும், அவர்களின் மூலமே விநியோகங்களை முன்னெடுப்போம் என்றும், எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க.

அவர் இப்பொழுது எல்லாத் தரப்புகளையும் எச்சரிக்கின்ற, மிரட்டுகின்ற தொனியில் பேசத் தொடங்கி இருக்கிறார்.

ஊடகங்களையும் எச்சரித்துப் பார்த்தார். இராணுவத்தை வைத்து அரிசி ஆலைகளை நடத்துவது, அரிசி விநியோகத்தை முன்னெடுப்பது என்பது சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடப் போவதற்கான அறிகுறியாகும். இதே முடிவை முன்னைய அரசாங்கங்கள் எடுத்தபோது, இது ஜனநாயகம் இல்லை என்றும், இராணுவ ஆட்சி என்றும் விமர்சனம் செய்த, தேசிய மக்கள் சக்தி இப்பொழுது அதே இராணுவத்தை வைத்து மிரட்டுகின்ற நிலைக்கு வந்திருக்கிறது.

இவ்வாறான நிலை ஏற்பட்டால்? அது அரசாங்கத்துக்கு எதிராகவும், இராணுவத்துக்கு எதிராகவும் கிளர்ச்சிகள் உருவாகவும் வாய்ப்புகள் உள்ளன.

உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, உப்பை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்தது.

இந்தளவுக்கும், அரிசி போன்ற உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் இறக்குமதியைத் தடை செய்வோமென, தேசிய மக்கள் சக்தி தேர்தல்களின்போது வாக்குறுதியைக் கொடுத்திருந்தது.

ஆனால், ஆட்சிக்கு வந்தபின்னர், இறக்குமதிகளை மாத்திரமே தீவிரமாக முன்னெடுக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, இப்போது, தேங்காய் தட்டுப்பாடு மோசமான கட்டத்தை எட்டியிருக்கிறது. இந்தத் தட்டுப்பாட்டின் விளைவாக, உள்ளூரில் தேங்காய் விலை 250 ரூபாவுக்குமேல் விற்கத் தொடங்கிவிட்டது.

இந்நிலையில், 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்றும், இல்லாவிட்டால் தேங்காயின் விலை 300 ரூபாய்க்குமேல் போய்விடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பதெனத் தெரியாமல் இருக்கின்றது.

சதொசா விற்பனை நிலையங்களின் மூலம், 2 இலட்சம் தேங்காய்களை விநியோகித்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றியே அரசாங்கம் சிந்தித்தது. ஆனால் இலங்கையில் 60 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இருக்கின்ற நிலையில், 2 இலட்சம் தேங்காய்களை விநியோகித்து இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது என்ற அடிப்படை அறிவுகூட அரசாங்கத்தில் உள்ளவர்களிடம் இருக்கவில்லை.

அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி கொடுத்ததால்தான், அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது என ஒரு காரணம் அரசதரப்பினால் கூறப்பட்டது.

உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, காலநிலை சீரின்றி இருப்பதால், உற்பத்தி பாதிக்கப்பட்டது என காரணம் சொல்லப்பட்டது.

தேங்காய் தட்டுப்பாட்டுக்கு, காலநிலை மாற்றமும் பூச்சிகளின் தாக்கமும் மாத்திரமன்றி தேங்காய் ஏற்றுமதியும் கூட காரணமாக இருந்தது.

அப்படியிருக்க, தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர், வீடுகளில் சம்பல் சாப்பிடுவதாலும், தேங்காய்ப் பால் சமையலுக்கு பயன்படுத்துவதாலும்தான், இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகக் கூறி இருக்கிறார். இவற்றைத் தவிர்த்துக் கொண்டால், தேங்காய் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என அவர் யோசனை கூறியிருக்கிறார்.

அரிசி, உப்பு, தேங்காய் ஆகிய மூன்றும் இலங்கையில் எல்லா மக்களும் பொதுவாகப் பயன்படுத்துகின்ற பொருட்கள்.

அப்படி இருக்க, உணவுக்காக தேங்காயைப் பயன்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளும் அமைச்சரைக் கொண்டிருக்கும் அரசாங்கம் எப்படி, நாட்டின் மிகப் பெரிய பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகிறது? என்ற கேள்வி எழுகிறது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது, ஒரு பெரியதொரு மாற்றம் நிகழ்ந்திருப்பதாக நம்பப்பட்டது.

இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களில், அதிகளவானோர், படித்த மேதாவிகள் என்று பெருமைப்பட்டுக் கொண்டவர்கள் அதிகம்.

பேராசிரியர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள் என, தேர்ந்தெடுத்து அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல, கலாநிதிப் பட்டம் பெற்றவராக அறிவித்து இருந்தார். ஆனால் அவரது கல்வித் தகைமை கேள்விக்கு உட்படுத்தப்பட்ட போது, அவரது கலாநிதிப் பட்டம்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram - February 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-31 6:32 PM Page 5



# அமெரிக்க.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

'Tik Tok' நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியான Shou Chewஉடன் அமெரிக்காவின் கோடீஸ்வரர்களான Mark Zuckerberg, Jeff Bezosஉடன் உலகின் முதலாவது பணக்காரராகக் கருதப்படும் 'Tesla' நிறுவன நிறைவேற்று அதிகாரி Elon Musk, 'Apple' நிறுவன அதிபர் Tim Cook, 'Alphabet' நிறுவன நிறைவேற்று அதிகாரி Sunder Pichai ஆகியோருடனும் பன்னிரண்டிற்கு மேற் பட்ட கோடீஸ்வரர்கள் அதிபர் பதவியேற்பு விழாவில் நேரடியாகக் கலந்துக் கொண்டனர். இப்பதவியேற்பு விழாவில் நேரடியாகப் பங்குபற்றியோரின் சொத்து மதிப்பு ஒரு இலட்சம் கோடியைவிட (Trillion) அதிகமென ஓர் ஊடகவியலாளர் குறிப்பிட்டிருந்தார்.



President Donald Trump sworn in by Chief Justice John Roberts, with Ivanka Trump, Tiffany Trump, and former president Joe Biden Thanks: Wikipedia

ஜனவரி 20ஆம் திகதி நண்பகல் அமெரிக்க உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜோன் ரொபேர்ட்ஸ் (John Roberts) டொனால்ட் டிரம்ப்பிற்கு



Donald Trump sworn in as the 47th president with Melania Trump Thanks: NDTV World

அமெரிக்க அதிபராக சத்தியப்பிரமாணம் செய்து வைத்தார். டொனால் டிரம்பின் துணைவி யார் மெலனியா டிரம்ப் அருகில் இரண்டு பைபிள்களை வைத்திருந்தார். டொனால்ட் டிரம்ப் சத்தியப்பிரமாணம் செய்யும்போது வலது கையை உயர்த்தி சத்தியப் பிரமாணம் செய்தார். அவர் இடது கையை பைபிளின் மேல் வைத்திருக்கவில்லை. அமெரிக்க அரசி



Donald Trump places wreath at Arlington National Cemetery Thanks: Wikipedia

யல் அமைப்புச் சட்டப்படி அமெரிக்காவின் எந்த ஒரு பதவிக்கும் சத்தியப் பிரமாணம் எடுக்கும்போது எந்த ஒரு சமயப் புத்தகங்கள் மீதும் கை வைத்துக் கொண்டு எடுக்கத் தேவையில்லை.

சமயப் புத்தகங்கள்மீது கை வைத்துக் கொண்டு சத்தியப்பிரமாணம் எடுத்தல் ஒரு சம்பிரதாயமாகவே கடைப்பிடிக்கப்படு கிறது. இதற்கு முன்னர் பல அமரிக்க அதிபர்கள் சமயப் புத்தகங்கள் எதன் மீதும் இடது கையை வைக்காமலேயே சத்தியப் பிரமாணம் செய்திருக்கின்றனர்.

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் சத்தியப் பிரமாணம் செய்ததைத் தொடர்ந்து அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் இணை நீதிபதி பிரெட் கவனாக் (Brett Kavanaugh) ஜே.டி. வான்ஸ்சிற்கு அமெரிக்க துணை அதிபராக சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார். ஜே.டி. வான்ஸ்சின் துணைவியார் உஷா வான்ஸ் அருகில் ஒரு கையில் பைபிளையும், மற்றொரு கையில் அவர்களது மகள் மிராபெல் ரோஸையும் பிடித்திருந்தார்.



J.D. Vance sworn in as the 50th Vice President with Usha Vance Thanks: NDTV World

ஜே.டி. வான்ஸ் தனது இடது கையை சமயப் புத்தகத்தில் வைத்துக்கொண்டு வலது கையை உயர்த்தி சத்தியப் பிரமாணம் செய்தார். அமெரிக்காவின் 50ஆவது துணை அதிபராக ஜே.டி. வான்ஸ் பதவியேற்ற பின்னர் உஷா வான்ஸ் அமெரிக்காவின் முதலாவது இந்திய-அமெரிக்க மற்றும் இந்து 'இரண்டாவது பெண்மணி' ஆனார். இவர் களின் மூன்று பிள்ளைகளான இவான் பிளேன் (Ewan Blaine) 7 வயது, விவேக் 4 வயது மற்றும் மிராபெல் ரோஸ் (Mirable Rose) 3 வயது ஆகியோரை யும் இராணுவ 'நிகழ்வுகளுக்கான சீருடை அணிந்த வீரர்கள்' அழைத்து வந்தனர். உஷா வான்ஸ் இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்த தெலுங்கு குடிவரவாளர்களான ராதாகிருஷ்ண சிலுக்குரி (விண்வெளி பொறியியலாளர்) மற்றும் லட்சுமி சிலுக்குரி (கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர்) ஆகியோரின் மகளாவார்.



President Donald Trump signed a record number of executive orders. Thanks: NDTV World

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற முதல்நாளிலேயே அவர் 26 அமெரிக்க அதிபரின் நிர்வாக உத்தரவு களைப் பிறப்பித்தார் (Executive Orders). இதுவே அமெரிக்க அதிபர் ஒருவர் பதவியேற்று ஒருநாளில் கையொப் மிட்ட அதிகூடிய நிர்வாக உத்தரவு களாகும். இதற்குமுன்னர் முன்னாள் அதிபர் ஜோ பைடன் பதவியேற்ற முதல் நாளில் ஒன்பது நிர்வாக உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்.

அமெரிக்க அதிபர் கையொப்பமிடும் நிர்வாக உத்தரவுகளுக்கு அமெரிக்க நாடாளுமன்றத்திடமிருந்து அனுமதி தேவை யில்லை. அவை உடனடியாக அமலுக்கு வரும். ஆனால், இந்த நிர்வாக உத்தரவு களை அமெரிக்க அரசியல் அமைப்புக்கு முரணானவை என நீதி மன்றத்தில் வழக்குப் போடலாம். அதேபோல் நாடாளுமன்றமும் இந்த நிர்வாக உத்தரவு களை அமல்படுத்த போதிய நிதியை வழங்காமல் முட்டுக்கட்டை போடலாம்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வழங்கிய இந்த 26 புதிய நிர்வாக உத்தரவுகளுடன் ஏற்கனவே முன்னாள் அதிபர் ஜோ பைடனால் பிறப்பிக்கப் பட்டிருந்த அதிபரின் 78 நிர்வாக உத்தரவுகளையும் ரத்துச் செய்தார். இந்த ரத்துச் செய்யப்பட்ட 78 நிர்வாக உத்தரவு களில் பெரும்பாலானவை பசுமைஇல்ல வாயு உமிழ்வைத் தடுக்கும் முயற்சிகள், மத்திய கூட்டாட்சி அரசின் நிலங்களில் கச்சாய் எண்ணெய் எடுப்பதற்கான துளையிடுவதை தடுக்கும் முயற்சிகள், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் விலை யைக் குறைத்தல் போன்றவையாகும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2 நாட்களில் கையெழுத்திட்ட புதிய 28 நிர்வாக உத்தரவுகளில் 14 அரச நிர்வாக முறையை மாற்றியமைக்கும் உத்தரவு களாகும். மத்திய அரசிற்கு பணியாளர் களைத் தெரிவு செய்யும்போது தகுதி அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிபர், "தற்போதைய DEI எனப்படும் 'பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்' முறை வெள்ளை



The Trumps and Vances dance during the Liberty Ball at the Washington Convention Center. Thanks: Wikipedia

நிறச் சமுதாயத்திற்கும் குறிப்பாக ஆண் களுக்கு எதிராக தீவிர பாகுபாட்டைக் காட்டும் முறையாகும்.

தமது அரசு அமல்படுத்துவது எவ்வித பாகுபாடும் இல்லாமல் முற்றுமுழுதாக தகுதி அடிப்படையில் தெரிவுசெய்யும் முறையாகும். இங்கு பணியாட்களை தெரிவு செய்பவர் நிறம் மற்றும் இனத்தைப் பற்றிக் கவனிக்கவே மாட்டார். முற்று முழுதாக பணியாட்களை தகுதி ஒன்றை அடிப்படையாக வைத்துத் தெரிவு செய்வார்" என்றார்.

இன்னொரு நிர்வாக உத்தரவு மத்திய அரச நிர்வாகத்தில் வினைத்திறனை (Efficiency) ஏற்படுத்த ஓர் அரசு வினைத்திறன் துறையை உருவாக்குகிறது.

6 புதிய நிர்வாக உத்தரவுகள் நாட்டின் குடிவரவுத் துறையை மாற்றியமைக்கிறது. இதில் ஒன்று அமெரிக்காவின் தெற்கு எல்லையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையால் 'தேசிய அவசரகாலச் சட்டத்தை' அமல்படுத்துகிறது. இன் னொன்று அமெரிக்காவிற்குள் சட்டப்பூர்வ மற்ற முறையில் ஊடுருவ முற்படும் வெளி நாட்டவர்களைத் தடுக்கிறது. இவ்வாறே வெளி நாட்டு பயங்கரவாதிகளிடமிருந்து அமெரிக்காவைப் பாதுகாக்கவும், அமெரிக்க எல்லைகளைப் பாதுகாக்கவு மென நிர்வாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

4 புதிய நிர்வாக உத்தரவுகள் நாட்டின் குற்றவியல் சம்பவங்களைக் குறைக்கவும், 3 புதிய நிர்வாக உத்தரவுகள் சுற்றுச்சூழல் மற்றும் சக்திவளத்தைப் பாதுகாக்கவும், ஒரு புதிய நிர்வாக உத்தரவு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கவுமாக மொத்தமாக 28 புதிய நிர்வாக உத்தரவுகளை அமெரிக்க அதிபர் தான் பதவி ஏற்று இரண்டு நாட்களில் பிறப்பித்துள்ளார்.

அமெரிக்க அதிபராகத் தெரிவு செய்யப் பட்டுள்ள டொனால்ட் டிரம்ப் கடந்த நான்கு ஆண்டுகளாக தனது தேர்தல் பிரசார காலத்தில் அமெரிக்க மக்களுக்கு என்ன உறுதிமொழி அளித்திருந்தாரோ அவற்றையே இப்போது தான் சொன்ன சொல் தவறாமல் அமல்படுத்துகிறார். இவற்றை அமல்படுத்தவே அமெரிக்க மக்கள் அவரை மிகவும் அதிக பெரும் பான்மையுடன் தெரிவு செய்தனர் எனக் கனடிய CBC ஊடகவியலாளர் கருத்துத் தெரிவித்திருந்தார். அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் சத்தியப் பிரமாணம் செய்தபின்னர் ஆற்றிய உரையில், "கடவுள் என்னை ஒரு படுகொலை முயற்சியில் இருந்து காப்பாற்றியுள்ளார். அதற்கு ஒரு காரணம் உண்டு. ஏன் என்றால் அவர் என்னை 'அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக்கும்' நோக்கத்தை நிறைவேற்ற அனுமதித்துள்ளார்" என்றார்.



# மெத்தனத்தால் அதிகரிக்கும் மேலாதிக்கம்

**– முகிலன் –**

போர் முடிவுக்கு வந்து சுமார் 15 ஆண்டுகள் ஆகின்ற நிலையில், தமிழ் மக்களின் தலைமைத்துவ வெற்றிடம் என்பது மிகத் தீவிரமாக உணரப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளாக இந்த வெற்றிடம் கணிசமாக உணரப்பட்டிருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருப்பு காணப்பட்ட காலம்வரை, ஓரளவுக்காவது நம்பிக்கையான சூழல் காணப்பட்டது. ஆனால், இப்பொழுது அந்த நம்பிக்கை இல்லாது போயிருப்பதுடன், அதன் தாக்கமும் அதிகளவில், உணரப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்த இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவும் இலங்கையின் பௌத்த சாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி ஆகியோர் இணைந்து, யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தின் பெயரை திருவள்ளுவர் கலாசார மையம் என மாற்றியிருந்தனர்.

இப்படி ஒரு பெயர் மாற்றம் நடக்கவிருக்கும் தகவல், யாருக்குமே தெரிந்திருக்கவில்லை.

இந்தியாவினால் 12 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்ட அந்தக் கட்டடம் அமைந்திருக்கின்ற, காணியின் உரிமை யாளரான யாழ்ப்பாண மாநகர சபைக்கும் அது தெரியாது.

வடக்கு மாகாண சபை நிர்வாகத்திற்கும் தெரியாது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாது.

யாழ்ப்பாண மக்களுக்கு அல்லது வெளியில் உள்ள தமிழ் மக்களுக்கும் தெரியாது.

இந்தப் பெயர் ஏன் மாற்றப்பட்டது? எதற்காக மாற்றப்பட்டது? யார் இதற்குப் பின்னால் இருந்தனர்? என்பதெல்லாம் இன்னமும் நீடித்துக் கொண்டிருக்கின்ற கேள்வி.

இந்தப் பெயர் மாற்றம் குறித்து உடனடி யாக எதிர்ப்பை வெளியிட்டது, தமிழ்த் தேசியக் கட்சிகளோ தமிழ்த் தேசியத் தலைவர்களோ அல்ல. ஈபிடிபி செயலாளர் நாயகம், டக்ளஸ் தேவானந்தாவே, முதலில் இதனை எதிர்த்தார்.

ஆளும் என்பிபி கட்சியின் வடக்கு மாகாண இணைப்பாளரும், கடற்றொழில் அமைச்சருமான சந்திரசேகர், கலாசார மையத்தின் பெயர் முதலில் ஆங்கிலத் திலும், அடுத்து சிங்களத்திலும், மூன்றாவ தாகத் தமிழிலும் இருந்ததைக் கண்டு, அதிர்ச்சியுற்றதாகக் கூறியிருந்தார்.

தமிழரசுக் கட்சி சில நாட்கள் கழித்து, இந்தியத் துணைத் தூதுவரிடம் ஒரு கடிதத்தை கையளித்தது. அதில் இந்தியாவை குற்றம் சாட்டாமல், நாசூக்கான முறையில், வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

தமிழ் மக்கள் மத்தியில், ஊடகங்கள் மத்தியில் இந்தப் பெயர் மாற்றம், கணிசமாக விமர்சனங்களை ஏற்படுத்தி இருந்த நிலையில், திடீரென யாழ்ப்பாண கலாசார மையத்தின் வெளிப்புற வாயிலில், யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் என ஒரு பெயர்ப் பலகை பொருத்தப்பட்டது.



இதன்மூலம் இந்தப் பிரச்சினை முடிவுக் குக் கொண்டு வரப்பட்டது. யார் இதனைச் செய்தனர் என்றோ, யார் இதனை திருத்தினர் என்றோ தெரியாமல் யாரும் பொறுப்புக்கூறாமல், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த விவகாரமானது, தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல், அவர்களுடன் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்படும் முடிவுகளும், நடவடிக்கை களும், இவ்வாறான எதிர்வினைகளையே ஏற்படுத்தும் என்ற உண்மையை, இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் உணரவைத்திருக்கிறது.

ஆனால் ஒன்று, இந்திய, இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களின் தலை மைத்துவம் தொடர்பாக ஒரு குறை மதிப் பீட்டை வைத்திருக்கின்றனர் என்பதை இந்தச் சம்பவத்தின் ஊடாகப் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழருக்கென வலுவான ஒரு தலைமைத்துவம் இல்லை, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஏகோபித்த ஓர் அரசியல் கட்டமைப்பு இல்லை.

அதனால் அவர்களின் சார்பில் நாங்களே முடிவுகளை எடுக்கலாம், அதனை யாரும் தட்டிக் கேட்கமாட்டார்கள், எதிர்க்கத் துணியமாட்டார்கள் என்ற ரீதியான சிந்தனை கொழும்பிலும் புதுடெல்லியிலும் இப்பொழுது மேலோங்கி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

1987ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி, ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன், ஒப்பந்தம் செய்து கொண்டபோதும் இதேபோன்ற தவறே இழைக்கப்பட்டது. தமிழ் மக்களின் விருப்பங்கள் குறித்து கருத்துகள் கேட்கப் படவில்லை. அவர்களின் ஆலோசனைகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் சார்பில் இந்தியாவே ஒப்பந்தத்தில் கையெழுத்தும் வைத்தது. அதன்விளைவாக, இந்தப் பிரச்சினை இன்றுவரை தீராமல் நீடிக்கிறது.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு என இந்தியா கொண்டுவந்த 13ஆவது திருத்தச்சட்டம் இன்றுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவும் இல்லை. அது நீடித்த பிரச்சினையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஏனென்றால், தமிழ் மக்களின் முழுமை யான ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் அவர்களின் கருத்தை அறிந்தும் தீர்வை முன்வைத்து அதனை அடைவதற்கு முயற்சித்திருக்க வேண்டும்.




அதனைப் புறக்கணித்ததன் விளைவா கவே, இந்தப் பிரச்சினை பிராந்தியத்தின் ஒரு முக்கியமான சிக்கலாக நீடித்துக் கொண்டிருக்கிறது.

இதற்குப் பின்னரும்கூட யாழ்ப்பாணம் கலாசார மைய விவகாரத்தில், இந்தியா தன்னிச்சையாகவே செயற்பட முனைந்திருக்கிறது.

தமிழரின் சார்பில் எதையும் தான் செய்ய முடியும் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வர் என்ற மனோநிலைதான் இதற்குக் காரணம்.

ஆனால், அதற்கு எதிரான விமர்சனங்கள், இப்பொழுது இந்தியாவை வேறுவழியின்றி மூன்றாவது தடவையாக இந்த மையத்திற்கு, பெயர் சூட்ட வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் இதே மனோநிலைதான் காணப்படுகிறது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ஒன்றைக் கூறியது, இப்பொழுது ஒன்றை செய்கிறது.

தேர்தலுக்கு முந்திய எந்த வாக்குறுதி யையும் அந்தக் கட்சி இப்பொழுது திரும்பிக்கூட பார்க்கத் தயாராக இல்லை.

தமது அமைச்சரவையில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் இணைந்திருப்பர் என்று அனுரகுமார திசாநாயக்க தேர்தல் பிரசாரங்களின்போது வாக்குறுதியளித்தார்.

ஆனால், இன்றுவரை வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழர் அல்லது முஸ்லிம் யாருமே அவரது அமைச்சரவையில் இல்லை.

இதுபோல பல வாக்குறுதிகள் நிறை வேற்றப்படாமல் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பிபி அரசாங்கம்.

தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும் எனக் கூறியபோதும், அது நடத்தப்படும் போலத் தெரியவில்லை.

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்து எல்லா மக்களும் சமத்துவமாக சம உரிமைகளுடன் வாழுகின்ற நிலையை ஏற்படுத்துவோம் எனக் கூறினர்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற் கான முயற்சிகளும் இப்போதைக்கு தொடங்குவதற்கான அறிகுறிகள் தென் படவில்லை.

ஆக மொத்தத்தில் சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதைபோல, தமிழ் மக்களின் நிலை காணப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களின் சார்பில் தாங்களே தீர்மானங் களை எடுக்கத் துணிகிறது.

தமிழ் மக்கள் தமது தேவை என்ன, விருப்பம் என்ன என்பதை வெளிப்படுத்தி, அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான சூழலை உருவாக்குவதுதான் முக்கிய மானது. ஆனால், தாங்கள் நினைத்த தைத் கொடுத்து, தமிழ் மக்களின் வாயை அடைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில், தமிழ்த் தேசிய அரசியலில் நீடிக்கின்ற தலைமைத்துவ வெற்றிடமும், அரசியல் கட்டமைப்பு வெற்றிடமும் தமிழரின் பிரச்சினை விடயத்தில், இந்திய, இலங்கை அரசுகள் மெத்தனத்துடன் செயல்படுவதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் காரணமாக இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த விடயத்தைப் புரிந்துகொண்டு செயற்படுவ தாகத் தெரியவில்லை. அவை உள்ளக மோதல்களுக்குள் தங்களை சிதைத்துக் கொண்டிருக்கின்றன.

பலமான ஒரு சக்தியாக தமிழரின் அரசியல் கட்டமைக்கப்படாது போனால், இப்போதுள்ள நிலையைவிட மோசமான ஒரு நிலைக்கு தமிழ்த் தேசிய அரசியல் தள்ளப்படும் ஆபத்து உள்ளது.

இதனை உணர்ந்துகொள்ளும் அரசியல் தீர்க்கதரிசனம், தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளிடம் இல்லாமல் போயிருப்பது தான், தமிழர்மீது அதிகாரம் செலுத்த முனையும், சக்திகளின் மெத்தனப் போக்கு மேலோங்குவதற்குக் காரணம்.

Vlambaram - February 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-31 6:32 PM Page 7



# உலகின் தொன்மைமிக்க நூல் வரலாறும் தொல்காப்பிய நூன் மரபும்



T. சிவபாலு

## ஓர் ஆய்வியல் நோக்கு

**முன்னுரை:** நூலாக்கத்தில் மிக முக்கியமானது எழுத்தாற்றலே. எழுத்தாற்றல் பன்னெடுங் காலமாக மனிதனிடையே ஏற்படுத்தப்பட்ட தொடர்பாடலின் பரிணாம வளர்ச்சியால் ஏற்பட்டுள்ளது. மனதில் உள்ளவற்றை வெளிக்காட்ட உதவும் ஆயுதமே எழுத்து. எழுத்து வடிவத்தின் ஆரம்பம் பற்றிய கருதுகோள்கள் பலவாக இன்றும் விவாதத்திற்குரியனவாக உள்ளன. உலகின் பல்வேறு பாகங்களிலும் மனித நாகரிக வளர்ச்சி ஒரே காலப்பகுதியில் நிகழ்ந்துள்ளமையை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மெசபடோமியாவின் 'சுமேர்' என்ற பகுதியில் வாழ்ந்த மக்கள், பழமையான எழுத்து முறையான கியூனிஃபோர்ம் (cuneiform) மூலம் பதிவுகளை வைத்திருக்கத் தொடங்கினர். கியூனிஃபோர்ம்



தோன்றிய ஓர் ஆயிரமாண்டுகளுக்குப் பிறகு அதனை நூல்வடிவில் பேணத் தொடங்கினர். கிமு 3500இல் மெசபடோமியர்கள் எழுத்தாலான பதிவு முறைகளை வைத்திருக்கத் தொடங்கியதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. வேறு சில இடங்களில் கற்படுக்கைகள், கற்றூண்கள், மரப்பட்டைகள், ஆமை ஓடுகள், மூங்கில் மற்றும் பைப்பிரஸ் மரங்களிலிருந்து ஏடுகளைத் தயாரித்து எழுதிய வரலாறுகளும் உள்ளன.

இந்தியாவில் எழுத்துகளின் தோற்றத்தின் அடிப்படையாக சிந்துவெளி நாகரிக காலத்தில் காணப்பட்ட சித்திர வரைபுகள் உள்ளன. மட்பாண்ட ஓடுகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. அதன் வளர்ச்சிப்படியில் பதனிடப்பட்ட ஓலைகளில் கூரிய எழுதுகோலால் எழுதும் முறை பின்பற்றப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் கிடைக்கும் முதல் இலக்கண நூலாகக் கருதப்படுவது 'தொல்காப்பியம்' கி.மு. 711வரையில் எழுதப்பட்டுள்ளது என்பது ஆய்வாளர்களின் கணிப்பாகும். எனவே தொல்காப்பியத்தின் தொன்மைத் தன்மையை அறிவதற்கு உலகில் எழுந்த இலக்கண நூல்களோடு ஒப்பு நோக்குவது அவசியமாகின்றது. உலகில் பண்டைய மெசப்பட்டேமியா, அக்காடியா, கிரேக்கம், எகிப்திய இலக்கண நூல்கள், சீன இலக்கண நூல்கள்பற்றி அறிந்திருந்தல் அவசியமாகின்றது. இதன்வழி உலகின் முதல்நூல் பற்றிய ஓர் ஒப்பீட்டுப் பார்வையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கிரேக்கத்தில் கி.மு. 2ஆம் 3ஆம் நூற்றாண்டுகளில் இலக்கண நூல்கள் எழுந்துள்ளன அரிஸ்டோக்கஸ் (Aristorchoes) மல்லோஸ் (Mallos 120 BC) கிறிஸிப்போஸ் (Chrysippos, 280-206) அப்பலோனிஸ் டைக்கூஸிலோஸ் (Appolonios Dyskoslos) போன்றோர் இலக்கண அறிஞர்கள் எனக் கருதப்பட்டாலும் சிறந்த பழைய இலக்கண அறிஞர்கள் என்று கருதப்பட்டவர் டயோனிசியஸ் திராக்ஸ் (Dionysius Thrax) ஆவார் எனவும் நவீன உலக வரலாற்றில் நூல் பற்றிய வரைவிலக்கணம் பல்வேறு மொழிகளில் பல அறிஞர்களால் தரப்பட்டுள்ளன. "செந்நெறிக்காலச் சிந்தனையில் ஒரு வரைவிலக்கணம் என்பது ஒரு பொருளின் தராதரத்தின் முக்கியத்துவத்தைக் (nominal essence) கொடுக்கும் ஒரு கூற்று என எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒரு பொருளின் அடிப்படையான பண்புக் கூறுகளே அதன் அடிப்படை இயல்புகளை உருவாக்குகின்றன. ஆகவே ஒரு பொருளின் வரைவிலக்கணம் இந்த அடிப்படையான பண்புக் கூறுகளை உட்படுத்தி இருக்க வேண்டும்" என்றார் அரிஸ்ட்டாட்டில்.

சுமேரிய நாகரிகத்தில் எழுந்த நூல்களுள் என்ஹெடுவானா Enheduanna (She was the first author to be named in all recorded history: the Mesopotamian poet, princess, and priestess Enheduanna. Surprised? "When people ask who is the first author, they never guess anyone in Mesopotamia, and it's never a woman." says Sidney Babcock, curator of the recently opened exhibition at New York City's Morgan Library, She Who Wrote: Enheduanna and Women of Mesopotamia, ca 3400-2000 BC) என்ற பெண் மதத்துறவி இந்த எழுத்து முறையை ஒரு புதிய வழியில் பயன்படுத்தத் தொடங் கினார். களிமண் தகடுகளில் எழுதி அவற்றைச் சுட்டு அழிக்கமுடியாத எழுத்துக்களைத்கொண்டு தகடுகளை அவர் சேகரித்து வைத்திருந்தார். அவரது தனித்துவமான இதுவே உலகின் முதல் நூலாக இதுவரை அறியப்பட்டுள்ளது. இவற்றைப் பிரஞ்சு நாட்டு archaeologist Sir Leonard Woolley கண்டெடுத்த களிமண் தகடுகளிலான நூலே உலகின் முதன்நூல் எனக் கருதுகின்றார்.

எழுத்தின் வளர்ச்சி மக்கள் தொடர்பு கொள்வதில் ஆரம்பத்தில் ஒலி எழுப்புவதன்மூலமும் சைகை காட்டுவதன் மூலமே இடம்பெற்றுள்ளது. பின்னர் வரைகலைக் குறியீடுகளை அதாவது மொழியல்லாத குறியீட்டு அமைப்புக்களை பல்வேறு நிலைகளில் பயன்படுத்தி வந்ததன் வழியாக எழுத்து முறை உருவாகியுள்ளதாக ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். அண்மையில் றிச்சாட் ஸ்புறோட் (Richard Sproat) எழுதிய 'Symbols -An Evolutionary Histroy from the Stone Age to the Future' உலகில் தோன்றிய பழம்பெரும் நாகரிகங்களின் அகழ்வாய்வுகளின்வழி கண்டெடுக்கப்பட்ட வரைகலைக் குறியீடுகளை ஆராய்ந்துள்ளார். ஆனால் சிந்து வெளி நாகரிக உருவங்கள் பற்றியோ அன்றி மட்பாண்டங்களில் உள்ள வரை வடிவங்கள் பற்றியோ அவரின் கவனத்தை ஈர்க்கவில்லை எனத் தெரிகின்றது. ஆய்வாளர்கள் கவனத்தைப் பெற்றிருந்தாலும் மெசப்பட்டேமியா, சீனா, எகிப்து, மத்திய அமெரிக்கா போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளைவிடக் குறைவாகவே உள்ளன. சீனாவில் கண்டெடுக்கப்பட்ட குகையில் மறைத்து வைக்கப்பட்ட ஏடுகள் பல உண்மைகளை வெளிக்கொண்டுவர உதவுவதாக உள்ளன. நாகரிக வளர்ச்சியில் சீனா முதனிலை வகிப்பதைக் காணமுடிகின்றது. சீனாவில்



மூங்கில் தகடுகளில் எழுத்துக்களை எழுதி வைத்துப் பதிவிடும் முறையையும் அதன் பின்னர் மரத்தை அரைத்து அதனை உறையவைத்து அதில் எழுதும் முறையையும் மேற்கொண்டுள்ளனர். சீனாவே காகிதக் கூழைப் பயன்படுத்தி அதன்மீது எழுதத் தொடங்கியோர் ஆவர்.

இவ்விதமே கிரேக்கத்திலும் தோல்களிலும், கற்பாறைகளிலும் எழுதும் முறை கையாளப்பட்டுள்ளது. எழுதிவைக்கும் முறை மொழியின் ஒலியை அடிப்படையாகக்கொண்ட எழுத்தைவிட அடையாளத்துடன்கூடிய கணக்கைப் பதிந்து வைத்திருக்கும் முறையும் காணப்பட்டுள்ளது. கணக்கியல் முறை முதன்முதல் மெசப்பட்டேமியாவில்தான் தோன்றியுள்ளது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். எனினும் இதற்கான போதிய ஆதாரங்களைப் பெற முடியவில்லை என்பதும் உண்மை. நூலாக்கம் அன்றைய தேவைகளின் அடிப்படையில் பதிவாக்கப்பட்டனவற்றைத் திரட்டி ஒன்றாகச் சேர்த்துக் கட்டிவைப்பதே நூலாக்கத்தின் முதற்படி எனலாம்.

## தமிழ் மொழியின் முதல் நூல்:

மொழியின் தோற்றப்பாடு, குறியீடுகள், வரைபடங்கள் என்பனவற்றின் கருத்தூட்டத்தை மட்டுமல்ல ஒளிகளுக்கும் அவற்றிற்குமான தொடர்புகளையும் ஆய்வுக்கு உட்படுத்துவது முக்கியமானது. தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 8ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பிந்தியது என்னும் கருத்தும் கி.மு. 711 என அறுதியிட்டுக் கூறுவோரும் உளர். தொல்காப்பியம் தமிழ் மொழியின் முதல் இலக்கண நூல் என்று கொள்ளமுடியாது என்று உரைகொள்வோரும் உளர். இளம்பூரணர் அகத்தியத்தின் வழிநூலாகவே காண்கின்றார். அகத்தியரின் நன்மாணாக்கராகத் தொல்காப்பியரைக் காட்ட விளைகின்றார். ஆனால் இவற்றை ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ ஆதாரங்கள் இல்லை எனலாம். அதற்கு முன்னர் பலர் நூல்களை ஆக்கியுள்ளனர் என்பதற்கு தொல்காப்பியத்தில் காணப்படும் 300இற்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்படும் அறிஞர்கள் பற்றி எண்ணக்கரு சாட்சியமாக்கப்படுகின்றது. ஆனால் தமிழில் கிடைத்துள்ள நூல்களுள் காலத்தால் முந்தியதும் அதற்கு முன்னரான நூல்கள்பற்றி ஏதும் குறிப்பிடப்படாமையாலும் இதனை முதன் நூல் என்றே அறிஞர்கள் கொள்கின்றனர். "தொல்காப்பியம் தமிழ் மொழியின் முதல்நூல் மட்டுமன்று திராவிட மொழிகள் அனைத்துக்கும் இதுவே முதல் நூல் ஆகும்" என்று முனைவர் அகத்தியலிங்கம் குறிப்பிடுகின்றார். "இம்மொழியின் முதல் நூல் என்று கருதப்படும் தொல்காப்பியம் ஏற்றமும் எழிலும் மிகுந்து காணப்படும் ஒரு பேரிலக்கணப் பெருநூல் ஆகும். தொல்காப்பியர் ஒரு பேரிலக்கணப் பேரறிஞர் மட்டுமல்லர், ஒரு பாவியல் பேராசானும் கூட" என தொல்காப்பியர் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை கருத்திற்கொள்ளத் தக்கது. ஆனால் குறியீடுகள் அர்த்தங்களை மட்டுமல்ல, தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 8ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பிந்தியது எனக் கருதுகின்றனர்.

தொல்காப்பியம் தமிழ் மொழியின் முதல் நூல் என்று கொள்ளமுடியாது. அதற்கு முன்னர் பலர் நூல்களை ஆக்கியுள்ளனர் என்பதற்கு தொல்காப்பியத்தில் காணப்படும் 300இற்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்படும் அறிஞர்கள் பற்றிய எண்ணக்கரு சாட்சியமாகக் காட்டப்படுகின்றது. 'என்மனார் புலர்', 'என்ப', 'மேலோர்' என்ற பதங்களால் தொல்காப்பியர் குறிப்பிடும் தமக்கு முந்தைய அறிஞர்கள் பற்றிய குறிப்புக்கள்மூலம் உணரமுடிகின்றது. தொல்காப்பியம், மொழி தோன்றி இலக்கிய மரபு தோன்றிய பின்னர்தான் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது ஏற்புடையது. தொல்காப்பியம் ஓலைச்சுவடியில் எழுத்தாணியால் எழுதப்பட்டுள்ளது. களிமண்ணிலோ அல்லது கற்பாறைகளிலோ எழுதப்பட்டதன்று, மாறாக பனை ஓலைச் சுவடியில் எழுதப்பட்டுள்ளது. பண்டைய 'தமிழி' அல்லது 'தமிழ்ப்பிராகிரதம்' எழுத்துக்களே ஆரம்பத்தில் பயன்படுத்தியுள்ளனர் என்பது ஆய்வாளர்களின் கருத்து. பனை ஓலைச் சுவடிகள் 300 ஆண்டுகளுக்கு மேல் நிலைத்திருக்க முடியாது என்பது விஞ்ஞான விளக்கம்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

Vlambaram - February 01, 2025.qxp_Vlambaram-Front  2025-01-31  6:32 PM  Page 8



# நாமும் நமது இல்லமும் 671




ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969


வழமைபோல 2025 ஜனவரி மற்றும் பெப்ரவரியில் ஆதன வியாபாரம் மந்தமாகவே காணப்படும். எனினும், 2024 ஆம் ஆண்டில் ஏற்படுத்திய 1.75% வங்கியின் வட்டிவீத இறக்கம் மற்றும் ஆதன விலை $1.5 மில்லியன் வரையில் காப்புறுதியுடன் வாங்கலாம் என்ற அரசின் புதிய கொள்கையுடன் மேலும் கடன் பெற்ற அடமானக்கடனை 30 வருடம் வரையில் திருப்பிச் செலுத்தலாம், போன்றவை 2025இல் ஆதன வியாபாரம் மீட்சிபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஜனவரி 29, 2025அன்று மற்றுமொரு 0.25% வட்டி வீத இறக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 3.00% ஆகக் குறைந்துள்ளது. மேலும், முதன்மை வட்டிவீதம் 5.20% ஆகவும் உள்ளது.

அண்மைக்காலமாக, கடந்த ஒரு வருடமாக வாடகைக்குத் தகுந்தவர்களைக் காணுவதிலும் கடினநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் புதிய அரசின் கொள்கையும் புதிய வரவாளர்களின் வருகையிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று மற்றும் ஆதன வாடகை இறக்கம் போன்றவற்றால் ஆதன வாடகைக்கு தகுந்தவர்களைப் பெறுவதில் மிகுந்த இடர்பாடு காணப்படுகின்றது. வாடகைக்கு வருவோரின் தகுதி நிலையும், ஒப்பீட்டளவில் சிறந்ததாக இல்லை.
மேலும் 2023, 2024ஆம் ஆண்டுகளில் அதிகளவு ஆதனங்கள் கட்டி முடிக்கப்பட்டு சந்தைக்கு வந்துள்ளது.

2023, 2024ஆம் ஆண்டுகளில் அதிகளவு அலகுகள் முற்றாக நிர்மாணிக்கப்பட்டு உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2025ஆம் ஆண்டிலும் 30,793 (112 கட்டிடங்கள்) ஆதனங்கள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் இந்த வருடம் (2025) அதிகளவான ஆதன அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட இருப்பதால் இந்த வருடமும், வாடகையின் நிலைமை மோசமாகவே காணப்படுமென எதிர்பார்க்கலாம்.

அதற்குப்பிறகு 2026, 2027ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்படும் அலகுகள் மிகக் குறைவாகவே காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2022, 2023, 2024ஆம் ஆண்டுகளில் புதிதாக நிர்மாணிக்கப்படவிருந்த பல ஆதனக் கட்டிடத் தொகுதிகள் பிற்போடப்பட்டன. இதனால், எதிர்காலத்தில் வாடகைக்கு இடம் பெறுவதில் நெருக்கடி தொடரும். உதாரணமாக 2024ஆம் ஆண்டில் 22,616 புதிய ஆதனங்களே கட்டத் தொடங்கப்பட்டுள்ளது. இதன் பாதிப்பு 2027, 2028, 2029ஆம் ஆண்டில் எதிர்கொள்ள நேரிடும்.

மேலும், 2024ஆம் ஆண்டில் ரொறொன்ரோ, ஹாமில்ரன் பகுதியில் 4,590 ஆதனங்களே விற்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 64% குறைவானது.




ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 2024ஆம் ஆண்டின் நாலாவது காலப்பகுதியில் ஒரு சதுர அடியின் சராசரி விலை $1130ஆகக் காணப்பட்டது. இது 2023ஆம் ஆண்டின் நாலாவது காலப்பகுதியில் ஒப்பிடும்போது 15% குறைவாகும்.

கனடிய ஆதன சம்மேளனத்தின் (Canadian Real Estate Association) எதிர்வுகூறலில் 2025ஆம் ஆண்டில் 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 8.6% அதிகரிக்கும் எனத் தெரிய வருகின்றது.

இவ்வாறான எதிர்வு கூறல்கள் இருப்பினும், அமெரிக்காவில் புதிதாக பதவியேற்றுள்ள அதிபர் டொனால்ட் டிரம்ப் (Donald Trump) மற்றும் கனடா மற்றும் ஒன்ராறியோவில் நடைபெற உள்ள தேர்தல்களும் ஆதனத்தில் முக்கிய பங்குகள் பெறலாம் என எதிர்பார்க்கலாம்.

எதிர்பார்த்ததுபோல அடமானக்கடன் இறங்கி வருகின்றது. இந்நிலைமை தொடருமா அல்லது உலகளவில் புதிய அரசியல் கொள்கைகளில் எவ்வாறான மாற்றங்கள் நடைபெறும் என்பதில், கனடியப் பொருளாதாரமும் தங்கியுள்ளது. எனினும் இன்றைய நிலையில் கனடியப் பொருளாதாரத்தைப் பற்றி ஆய்வாளர்களின் முடிவு தெளிவில்லாமலேயே காணப்படுகின்றது. பெப்ரவரி முதல் கிழமையில் கனடா மீதான 25% வரி பற்றி தெளிவு ஏற்படலாம்.

## தீர்க்கப்பட...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

உண்மையல்ல என்பது தெரிய வந்தது.

தனது கல்வித் தகைமையை நிரூபிக்க முடியாத அவர் பதவி விலகினார்.

அதற்குப்பின்னர் பலர் தங்களது பெயருக்கு முன்னால் இருந்த பட்டங்களை மறைக்கத் தொடங்கினர்.

இப்பொழுதுகூட, தன்னை ஒரு பேராசிரியர் எனக் கூறிவந்த ஓர் அமைச்சர், நாடாளு மன்ற இணையத்தளத்தில் இருந்து பேராசிரியர் என்பதை நீக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

உண்மையான கல்வித் தகைமையும் அனுபவமும் உள்ளவர்கள், அதனை நடைமுறையில், மக்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அதிக கல்வித் தகைமை கொண்டவர்களால் நிரம்பியிருந்தாலும், அவர்கள் கல்வித் தகைமைக்கேற்ப செயல்பட முடியாதவர்களாக இருக்கின்றனர்.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

கோட்டாபய ராஜபக்ச, வியத்மக என்ற பெயரில் நிபுணர்கள் குழாமை உருவாக்கியிருந்தார். நாட்டைப் புதிதாகச் செதுக்கப் போவதாக கூறினார். ஆனால், அவரது அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.



அதேபோலத்தான், அனுரகுமார திசாநாயக்கவினாலும் மேதாவிக் கூட்டத்தை வைத்து, நடைமுறை அரசியலைக் கையாளமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.


1 Bedroom with living room bsmt for rent. Sep. entrance & 1 parking. No pets. Close to TTC, Amason & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.400.3214**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & FINCH**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance & 1 par king. Couple preferred. Close to TTC & Eraa supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.832.6457**

## BASEMENT FOR RENT
**ELLESMERE & SCAR. GOLF CLUB**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.998.0181**

## ROOM FOR RENT
**MARKHAM & ELLESMERE**
சாப்பாட்டுடன் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. முதியோர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.271.1727**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
1 Specious big room with living space for rent in a town house. Sep. wash room, sep. kitchen. Ideal for working female/student. 1 Min walking to bus stop (24X7). Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.455.7961**

## ROOM FOR RENT
**KINGSTON & SHEPPARD**
வயதான பெண்மணிக்கு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. அனைத்து வசதிகளும் அருகில் உள்ளது.
தொடர்புகளுக்கு: **416.298.0134**

## ROOM FOR RENT
**BIRCHMOUNT & SHEPPARD**
1 Room for rent in a bsmt. Sep. entrance & parking. Male preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.873.0549**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent. 1 Bachelor apartment for rent. All inclusive. Avail. immediately.
**416.522.3314/437.219.3329**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedrooms in main unit for rent. Close to bus stop, banks & superstores. Shared Kitchen & washroom. All bills included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.410.4706**

## ROOM FOR RENT
**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent. Parking available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.454.9986**

## ROOM FOR RENT
**SIMCOE & RITSON**
**OSHAWA** - 1 Bedroom for rent in a house. parking. Close to bus stop, University & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.857.1292**

## ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
2 Rooms available in main floor. Close to all facilities. Ladies only. Avail. immediately.
**647.858.2290 /647.534.9897**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & STAINES**
2 Bedroom for rent in a main floor. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.888.9437**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to Costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.764.5246**

## HOUSE/BASEMENT FOR RENT
**BRIMLEY & EGLINGTON**
3 Bedrooms & 1 washroom bangalow house for rent.
**STAINES & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
4 Bedrooms house for rent.
**KENNEDY & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent.
தொடர்புகளுக்கு: **905.205.0520**

## HOUSE/BASEMENT FOR RENT
**9TH LINE & 14TH AVENUE**
4 Bedrooms & 3 washrooms house for rent. 2 Bedrooms & 2 washrooms bsmt for rent.
தொடர்புகளுக்கு: **416.918.9848**

## HOUSE / ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms /Rooms for rent. 5 Min. walk to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.897.3195**

## BASEMENT/ROOM FOR RENT
**9TH LINE & HOOVER PARK** - 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking.
**CONLINS & SHEPPARD** - Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.3355**

## ROOM FOR RENT
**TAPSCOTT & FINCH**
2 Bedrooms in Upstairs. Shared washroom & kitchen. Male only. Close to TTC, Centennial College & grocery shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.837.1860**

## HOUSE/BASEMENT FOR RENT
**MEADOWVALE & ELLESMERE**
Side split 3. 4 Bedrooms (1 in Main, 3 in bsmt), 2 Washrooms, Kitchen, Living Room & Separate laundry. Close to UofT, Centennial College, TTC & LRT Bus Stop.
Contact: Thinesh @ **416.871.2475**

## HOUSE & CONDO. FOR RENT
**BROCK & TAUNTON (PICKERING) -** 4 Bedrooms & 4 washrooms brand new house for rent.
**MONINGSIDE & FINCH -** 4 Bedrooms & 3 washrooms house for rent.
**PHARMACY & SHEPPARD (SCARBOROUGH)-** 2 Bedrooms & 2 washrooms brand new condo. for rent.
**Please call or text - 647.269.0193**

## HOUSE/BASEMENT FOR RENT
**LAWRENCE & SCAR. GOLF. CLUB**
3 Bedrooms & 2 washrooms house for rent. 2 Bedrooms & 1 washroom house for rent. 2 Bedrooms bsmt for rent. All Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.897.8067**

## ROOM FOR RENT
**MARKHAM & SHEPPARD**
1Room for rent. Rent $500 +utility.
**MARKHAM & DENISON**
1 Very large bedroom Rent $1,400. 2 Male preferred. Rooms available $500 & $600. No alcohol, no pets & no smoking. Avail.immediately.
**647.507.2148/647.864.1051**

## CONDO. FOR RENT

**WHITES & KINGSTON**

**755 Omega Dr.- PICKERING**

2 Bedrooms & 2.5washrooms Condo. for rent. Close to bus stop & HWY 401 Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.454.6101**

## HOUSE FOR RENT

**MARKHAM & LAWRENCE**

3 Bedrooms & 2 full washrooms house for rent. 2 Parking & sep. laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.588.2228**

## வீடு காணி விற்பனை

யாழ்ப்பாணம் கோண்டாவில் டிப்போவிற்கு அருகாமையில் 2 1/2 பரப்பு உறுதிக்காணி 5 அறைகள் 2 குளியலறையுடன்கூடிய புதிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு**416.505.4449**

## வேலைக்கு ஆள் தேவை

**House Keeping & Cooking**

**MARKHAM** பகுதியில் 06:30Am-09:30Amஇற்கு இடையே வீட்டுபராமரிப்பு மற்றும் சமையல் வேலைகளைச் செய்வதற்கு பெண் தேவை.

தொடர்புகளுக்கு: **416.918.9848**

## CONDO. FOR SALE

**DOWNTOWN**

1+ Den newly built Condo. with lots of amenities for sale. Locker also available. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.918.9848**

## HOUSE FOR RENT

**NEILSON & FINCH**

3 Bedrooms & 1.5 washroom bangalow house main floor for rent. 2 Parking. 24 hrs. bus service. Wifi included. Walking distance to Eraa supermarket. Avail. Feb. 01, 2025.

**416.456.1031/416.299.3919**

## BARBER WANTED

**MARKHAM & SCARBOROUGH**

பகுதியில் சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு சிகை அலங்கரிப்பாளர் **(BARBER)** உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு:**416.880.4829**

## நிலா திருமணசேவை

கனடாவில் வாழும் 30, 31 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை கனடாவில் தேடுகிறோம். (Visit Visaவில் உள்ள மணமகளும்) கனடாவில் வாழும் 28, 29, 30 வயதுடைய Charted Accountant, Mechanical Engineer ஆக புணிபுரியும் மணமகன்களுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **437.772.8129**

## CONDO. FOR RENT

**BROCK & TAUNTON**

**1695 Dersan St-** 2 Bed rooms & 2.5washrooms Condo. for rent. Open terrace & 1 Parking. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.625.7535**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE &ELLESMERE**

3 Bedrooms & 1 washroom main floor for rent. 2 Parking. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.271.5420**

## முதியோர் பராமரிப்பு

**MARKHAM & STEELES**

பகுதியில் உள்ள வீட்டில் முதியோருக்கு இருப்பிடமும் உணவும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.761.7568**

## HOUSE KEEPER WANTED

Waterloo பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தமிழ் தம்பதிகளை வீட்டிலிருந்து பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ள ஒருவர் தேவை.

Please call: **+1.519.500.0487**

## CONDO. TOWN HOUSE SALE/RENT

**MCLEVIN & TAPSCOTT**

1 Bedroom + Den & 1.5 washroom Brand new Condo. town house for Sale/rent. Good for Couple. Close to access the bus & all facilities. Avail. February 01, 2025.

**416.831.3784/647.210.6556**

## HOUSE FOR RENT

**WARDEN & HWY 401**

3 Bedrooms & 1 washroom house for rent. 2 Parking.1Min. walk to bus stop. Close to all facilities. Avail. March 01, 2025

**416.414.0439/647.740.8181**

## DIGITAL PRINTING SHOP FOR SALE

**PRINT N COLOUR - ELLESMERE & KENNEDY**

All new Technology. No need Experience. We will train. 1 Month free training. introducing all technique & all suppliers.

அச்சகம் விற்பனைக்கு உண்டு. இலவச பயிற்சி மற்றும் வியாபார வழிகாட்டல்கள், மற்றும் வாடிக்கையாளர் தொடர்பான விபரங்கள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **416.829.5783**

## CONDO. FOR RENT

**HWY 7 & JANE ST.**

**2916 HWY 7 -**1 Bedroom + Den condo. for rent. 2 full washroom, Rent -$2,600. 675 Sq.Ft. Locker & Parking. 5 Min. to Vaughan Metropolitan Centre. Avail. Feb. 01, 2025.

தொடர்புகளுக்கு: **647.772.6282**

## HOUSE FOR RENT

**MARKHAM & HWY 7**

3 Bedrooms bungalow house for rent. Close to all facilities. Avail. February 01, 2025.

தொடர்புகளுக்கு:**647.883.1054**

## அலுவலக வேலைக்கு ஆள் தேவை

Scarborough பகுதியிலுள்ள **WINDOWS & DOORS** தொழிற்சாலையில் அலுவலக வேலைகளைச் செய்வதற்கு கணினி அறிவு (Quickbook, Excel & etc.) Accounts திறமை, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவர்கள் தேவை

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

4 Bedrooms house for rent.

**STAINES&MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT

**MARKHAM & SHEPPARD**

2 Bedrooms & 2 washrooms Two-story Townhouse for rent. Parking, laundry. Close to all major supermarkets, 24Hr Bus with 1 minute walk. No pet or smoke.

தொடர்புகளுக்கு: **416.477.8746**

## CHEF & WAITRESS WANTED

**SCARBOROUGHஇலும் DOWNTOWNஇலும் அமைந்துள்ள ENGLISH PUBஇற்கு minimum 5 years Experienced CHEF & WAITRESS wanted immediately. Full time / Part time**

**Please Contact : 416.566.9994**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**CASHIER (காசாளர்)/ சமையல் வேலையாள்**

Markham பகுதியிலுள்ள தமிழ் Restaurant ஒன்றிற்கு காசாளர்கள் (Cashier) (4பேர்) தேவை. முன் அனுபவமுள்ள பெண்கள் தொடர்பு கொள்ளலாம். மற்றும் சமையல் செய்வதில் முன் அனுபவமுள்ள சமையல் ஆட்கள் உடனடியாகத் தேவை. இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **Raj - 416.999.3878**



**தவறைச் சுட்டிக்காட்டாமல்**
**அடிமையாக இருப்பதைவிட**
**தவறைச் சுட்டிக்காட்டிவிட்டு**
**எதிரியாக வாழ்ந்து விடலாம்...**

Vlambaram - February 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-31 6:32 PM Page 17



**WPM Property Management**
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**
*Oshawa* -Hwy 2 / Trulls Rd - Bungalow (5Brm + 2Bath) [$3475/ month]
*Whitby* -Des Newman / Twin Streams -Full ( 3 Brm + 3 Bath + Parking) ($3500/month)
Oshawa - Upper floor Bond/Mcmillan ( 3 Brm + 1 Bath ) Separate entry and laundry ( $2950/month)
*Scarborough* - Morningside/Sheppard ( 2 Brm + 1 Bath ) ($1850/ month)
Niagara Falls - Lundy's Lane / Dorchester (4BR 3Bath $3200)

**Available for Rent**
*Oshawa* - Harmony/ Olive - Basement (1Brm + 1 Bath + 1 parking) [$1450.00/month including utilities)
*Scarborough* - Mccowan & Lawrence-Basement (2Brm + 1Bath) [$2,100/month)
*Whitby* - Country Lane & Southwell Ave Basement (2Brm + 1Bath) [$1600/month]
*Mississauga*-Confederation / Burnhamthorpe - Condo (1Brm + 1Bath) [$2300/month]
Scarborough - Morningside/Lawrence main floor(3 Bm + 1 Bath) ($2800)

**BUY / SELL/ LEASE / INVEST**
- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 36 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

இலங்கையில் (Sri Lanka)
வீடு, காணி, வியாபார நிலையங்கள்
வாங்க விற்க தொடர்புகளுக்கு

Lanka Global Real Estate
170 Columbuthurai Rd
Jaffna
Email: sales@langaglobal.lk
Phone: 94-77-666-5513

கரு கந்தையா
[கனடா]
Phone:
1-416-616-7278

அரன் கந்தையா
[அவுஸ்திரோலியா]
Phone:
61-418-553-6613

# பொய்மான் – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழரால் எடுக்கப்பட்ட படம் இது. 2023இல் வெளியான இப்படம் அண்மையில் தயாரிப்பாளரால் யூடியூப்பில் வெளியிடப்பட்டது.

இப்படத்தில் அவுஸ்ரேலியாவில் வாழும் பணக்காரத் தமிழர் ஒருவருக்கு மறதி நோய் (Dementia) இருப்பதால், அவரது மகன், அவரைப் பார்ப்பதற்கு அன்பு என்பவரை வேலைக்குச் சேர்க்கிறார். அன்பும் அவரது மனைவியும் அண்மையில் இலங்கையிலிருந்து கப்பலில் அகதியாக அவுஸ்ரேலியாவிற்கு வந்தனர்.

அன்பும் அவரது மனைவியும் அவுஸ்ரேலியாவில் அகதியாக இருப்பதில் சட்டப் பிரச்சனையில் சிக்கியுள்ளனர். இப்பிரச்சனையைத் தீர்க்க ஒரு சட்டத்தரணியின் உதவியை நாடத் தேவைப்படும் பணம் அவர்களிடம் இல்லை. சில நாட்களினுள் பணத்தைச் செலுத்தி உதவி பெறாவிட்டால் அவர்கள் அவுஸ்ரேலியாவை விட்டு வெளியேற்றப்படுவர்.

இவ்வாறு, அளவுக்கு அதிகமாகப் பணமிருந்தும் மறதி நோயால் தாக்கப்பட்டவரையும், பணமில்லாமல் பிரச்சனையில் சிக்கிய அன்பையும் இப்படம் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

அன்பு தனது பிரச்சனையைத் தீர்க்க பணத்தைப் பெறுவாரா? இல்லாவிட்டால் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படுவாரா? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

புலம்பெயர்ந்த தமிழரின் தயாரிப்பான இப்படம் நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்படம் முழுநீளப்படம் என்றாலும் 90 நிமிட நேரத்துடன் பொதுவான தமிழ்ப் படங்களைவிட குறுகியதாக இருக்கிறது. ஆனால், இந்த நேரம் கதைக்குப் பொருத்தமாக உள்ளது. இயக்குநர் படத்தின் நேரத்தை அதிகரிக்க, கதையை



மிகைப்படுத்தாமல் விறுவிறுப்பாக அமைத்துள்ளார். படம் பணக்காரர், அவரது குடும்பம், அன்பு மற்றும் அவரது மனைவி என்ற அளவான கதாபாத்திரங்களைக் கொண்டுள்ளது.

இவ்வாறு பணக்காரரும், வசதியில்லாத வரும் வேலையின்மூலம் ஒன்றாகப் பழகுவதுபோல அமையும் கதைகள் பல உள்ளன. இப்படம் இதே கதையைக்



கொண்டாலும், புலம்பெயர் மற்றும் இலங்கைத் தமிழரைப்பற்றி இப்படம் காட்டுவதால் இது வேறுபட்டதாக அமைகிறது. அத்தோடு இப்படம் அகதிகளின் கஷ்டங்களை பார்வையாளர்களுக்கு நன்றாக உணர்த்துகிறது. இப்படத்தில் ஆங்கில உரைகள் அளவாக இருந்தன.

பணத்தைச் சேர்ப்பதைவிட மனிதர்கள் தமக்கிடையில் அன்பை வளர்ப்பதுதான் முக்கியம் என்றும், அன்பாகவும் நேர்மையாகவும் வாழ்வதால் வாழ்க்கை நன்றாக இருக்கும் என்ற முக்கிய, அடிப்படைக் கருத்துகளை இப்படம் உணர்த்துகிறது. இப்படத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பு (Sub titles) இருப்பதால் தமிழ் மொழி தெரியாதவர்களும் விளங்கிக்கொள்ளலாம். தரமான நடிப்பு, காட்சியமைப்பு, கதைப்போக்கு, தெளிவு மற்றும் கருத்துள்ள இந்தப் புலம்பெயர் தமிழ்ப் படத்தை அனைவரும் பார்க்கலாம்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Vlambaram - February 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-31 6:32 PM Page 18



# ரொறொன்ரோவில் பனிக்கால உள்ளக விளையாட்டுகள்



குரு அரவிந்தன்

வழமைபோல இந்த வருடமும் பனி கொட்டத் தொடங்கிவிட்டது. தரை எல்லாம் பனி வயலாகக் காட்சி தருகின்றது. மரங்கள் எல்லாம் இலை உதிர்த்து வெண்பனியால் போர்வை போர்த்திருக்கின்றன. புலம்பெயர்ந்தபின் இப்படியான காட்சிகளை ஒவ்வொரு வருடமும் பார்த்ததால்தான், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் வாழும் நிலச்சூழலையை வைத்து 'ஆறாம் நிலத்திணை' பனியும் பனி சூழ்ந்த பகுதியும் என்ற ஆய்வுக் கட்டுரையை நான் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டுக்காக எழுதினேன். சங்க இலக்கியத்தில் வரும் ஐந்து நிலத்திணைகளுடன் ஆறாம் நிலத்திணையாக சான்றோர் இதை ஏற்றுக் கொண்டனர்.

இக்காலத்தில் பொதுவான இலக்கிய, கலை நிகழ்வுகள் வெளியரங்குகளில் நடப்பதில்லை. சிறியகுன்றுகள் உள்ள இடங்களில் பனிச்சறுக்கல் விளையாட்டுகள் இடம்பெறுவதுண்டு. இதைவிட வெளி இடங்களில் 'சினோமான்' போன்ற பனியிலான பொம்மை உருவங்களைப் பெரிதாகச் செய்து காட்சிப்படுத்துவர்.



உள்ளக அரங்குகளில் ஐஸ்கொக்கி என்ற விளையாட்டுப் போட்டிகள், நீச்சல் போட்டிகள் போன்றவை நடைபெறும். ஒரு ஞாயிற்றுக்கிழமை முன்பு சோனிசென்ரர் என்று அழைக்கப்பெற்ற ஸ்கோஸியா அரங்கத்தில் கூடைப் பந்தாட்டப் போட்டி நடைபெற்றபோது அதைப் பார்க்கப் போயிருந்தேன். ரொறொன்ரோ றாப்ரேஸ் அணியினரும், அட்லான்டா ஹாக்ஸ் என்று அழைக்கப்படுகின்ற பருந்துகள் அணியினரும் மோதிக் கொண்டனர். ஞாயிற்றுக் கிழமை இரவு நடந்த இந்தப் போட்டித் தொடரில், அட்லாண்டா ஹாக்ஸ் அணியினர் ரொறொன்ரோ றாப்ரேஸ் அணியினரை 136-107 என்ற கணக்கில் வீழ்த்தி நான்காவது முறை வெற்றியைப் பெற்றுக் கொண்டனர். அடுத்ததாக ரொறொன்ரோ பொஸ்டனுடனும், அட்லாண்டா டென்வருட னும் விளையாடி இருக்கின்றனர்.

எப்படி இலங்கையில் உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுகள் பிரபலமாக இருக்கின்றதோ, அதேபோல கனடாவில் போஸ்போல், பாஸ்கற்போல் (கூடைப்பந்தாட்டம்), புட்போல், பனிக் கொக்கி போன்ற விளையாட்டுகள் பிரபலமானவை. ஜேம்ஸ் நைஸ்மித் என்பவ ரால் 1891ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கூடைப் பந்தாட்ட விளையாட்டில் தலா 5 வீரர்களைக்கொண்ட இரண்டு அணிகள் செவ்வக மைதானத்தில் விளையாடுவர். விதிமுறைக்கு ஏற்ப, ஒவ்வொரு அணியினரும் எதிராளியின் பக்கமாக உயரத்தில் உள்ள கூடை வளையத்திற்குள் பந்தைக் கைகளால் போட்டு வெற்றிப் புள்ளிகளைச் சேகரிப்பர். 1949ஆம் ஆண்டு என்.பி.ஏ (NBA) கூடைப்பந்து சங்கம் இதற்காக உருவாக்கப்பட்டது. இருபாலாருக்குமான இந்த விளையாட்டில், எர்வின் ஜோன்சன், யூலியஸ் எர்விங், லாரி பேர்ட், மைக்கேல் ஜோடன் போன்றோர் மற்றும் பெண்கள் அணியில் டயானா டௌராசி, லிசா லெஸ்லி, தமிகா காச், சிந்தியா கூப்பர், மாயா மூர் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.



---

## உலகின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால் தொடர்ந்து படி எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையால் இன்று எமக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது என்பதும் மறுப்பதற்கு இல்லை. தொல்காப்பியர் காலத்திற்குப் பன்நெடுங் காலத்திற்கு முன்பே தமிழ் மொழியில் இலக்கியங்களும் இலக்கணமும் தோன்றியிருத்தல் வேண்டும் என்னும் முடிவுக்கு இலகுவாக வரக்கூடிய தரவுகளைத் தொல்காப்பியரே தந்துள்ளார். உரையாசிரியர்கள் சிலர் தொல்காப்பியம் 'அகத்தியம்' தோன்றிய பின்னர் எழுந்த வழிநூல் எனவும் கொள்கின்றனர். இதற்குத் தொல்காப்பியத்தில் எந்தவித குறிப்புகள் கிடையாது என்பதையும் சிந்திக்க வேண்டும். தொல்காப்பியத்தைப் பாதுகாத்தவர்கள் அவரின் ஆசான் அகத்தியர் எனக் குறிப்பிட்டுள்ளனர் எனின் ஏன் அகத்தியம் பாதுகாக்க முடியாமல் போனது என்பது ஐயத்தை ஏற்படுத்துகின்றது. எனவே தொல்காப்பியம் உலகின் முதல் நூல் என்று கொள்வது ஏற்புடையது அல்ல என்ற கருத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றது. தொல்காப்பியத்திற்கு முன்னரே தமிழ் மொழியில் நூல்கள் இருந்துள்ளன என்பதோடு சுமேரிய, மாயன், மற்றும் சீன நாகரிகங்களில் எழுத்துமுறை தமிழ் மொழிக்காலத்தை ஒத்ததாகவோ அன்றி அதற்கு முற்பட்டதாகவோ இருக்கலாம் என்ற முடிவுக்கு இலகுவாக வரமுடியாத நிலையும் உண்டு.

எமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களுள் காலத்தால் முந்தியதும் முக்கியமானதுமான ஆவணமாகவும் இலக்கிய இலக்கணப் பாரம்பரியங்களைக் கொண்டதாகவும் தொல்காப்பியம் காணப்படுகின்றது. இவற்றைவிட தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள் எகிப்து, சீனா போன்ற நாடுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட கீழடி அகழ்வாய்வும் தமிழ் எழுத்துக்களின் காலத்தைப் பின்னோக்கித் தள்ளக் கூடிய ஆதாரங்களைத் தந்துள்ளன. தமிழ் எழுத்துக்கள் சுமேரிய நாகரிகத்துடனும் தொடர்புபட்டிருப்பதாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தமிழ் எழுத்துக்கள் தமிழ்ப் பிராகிரத நடையில் ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ளன என்பது ஆய்வறிஞர்களது முடிபாகும். காலப்போக்கில் எழுத்து வரிவடிவத்தில் மாற்றங்கள் காலத்திற்குக் காலம் ஏற்பட்டு வந்துள்ளமை தமிழ் மொழியில் மட்டுமல்ல உலகில் தோன்றிய மொழிகளுக்குப் பொதுவானவை. செய்திகளையும், கட்டளைகளையும் பதிந்து வைக்கும் முறையின் விருத்தியே நூலாக்கத்திற்கு அடிப்படையாயிற்று. இவை பெரும்பாலும் கற்பாறைகளில் காணப்படுகின்றன. அல்லது அதற்காகச் செதுக்கப்பட்ட கற்றூண்கள், நடுகற்கள், ஆலயங்கள் போன்றவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. இது உலகில் தோன்றிய பழம்பெரும் நாகரிகங்களின் மொழிகளின் பதிவாகக் காணப்படுகின்றன. ஆரம்பகால நாகரிகங்கள் வளர்ந்தவுடன், சமூகங்கள் மிகவும் சிக்கலானதாக மாறியது. பேசும் வார்த்தையைப் பிரதிநிதித்துவப்படுத்த, சின்னங்கள் மற்றும் படங்களுக்கு அப்பால் எதையாவது பதிவு செய்தல் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டும் என்னும் நிலைமை தோன்றியுள்ளது.



இதனடிப்படையில் எழுந்ததே எழுத்து முறை. இந்த அடிப்படைப் பதிவாக்கம் மெசபடோமியா, எகிப்து, சீனா மற்றும் மெசோஅமெரிக்கா. பண்டைய எகிப்தின் மொழியைத் திறக்கும் திறவுகோலை அறிஞர்களுக்கு வழங்கிய 19ஆம் நூற்றாண்டின் கண்டுபிடிப்பான ரொசெட்டா எனப்படும் கல்படிம ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த அடிப்படையில் உருவான நூலாக்க வரலாற்றில் தமிழின் நிலை என்ன என்பதற்கு எமக்குக் கிடைக்கும் ஆதாரங்களாக தொல்காப்பியத்தையும் அதன் சார்பு நூலான நன்னூலையும் ஒப்பிட்டு தமிழில் நூலாக்கம் பற்றிய கோட்பாடு மற்றும் வரையறைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



### நூலின் அமைப்புப்பற்றி தொல்காப்பியமும் நன்னூலும்:

நவீன எழுத்தாளர்களின் கூற்றுக்களுக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே தொல்காப்பியர் நூல் எழுதும் முறைக்கான வரைவிலக்கணத்தை மிகத் தெளிவாகத் தந்துள்ளமையைக் காணலாம். அவர் காலத்தில் செய்யுள் மரபே எழுத்தாகக் கொள்ளப்பட்டமையால் அவரது வரைவிலக்கணம் மரபுச் செய்யுள் நூலை அடியொற்றியதாக அமைந்திருக்கின்றது. இன்று சிறுகதைக்குத் தனியான அமைப்பு முறை, நவீனங்களுக்குத் தனியான அமைப்புமுறை, கவிதைக்குத் தனியான அமைப்புமுறை எனப் பல்வேறுபட்ட தளங்களில் விரிந்து செல்வதைக் காண முடிகின்றது. ஆனால் தொல்காப்பியனார் திருக்குறளைப்போல எக்காலத்திற்கும் பொருந்துவதாகத் தந்துள்ளமை தமிழுக்குக் கிடைத்த பெருமையாகும். நூன் மரபு பற்றிய கூற்றுக்கள் அன்றைய காலகட்டத்திற்கு மட்டுமல்ல இன்றும் பொருந்துவதாக உள்ளது. அது நூன் மரபின் சிறப்பியல்பாகும்.

தொல்காப்பியம் 'முதன்நூலா' அல்லது 'வழிநூலா' என்ற வினா எம்முன்னே எழுவது இயல்பு. தொல்காப்பியத்தில் உள்ள பல்வேறு கருத்துக்கள் அது 'முந்துநூல்கண்டு' என்னும் பதத்தால் தெளிவாகின்றது. நூல், புத்தகம் என்னும் இரு பதங்கள் ஒரே கருத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எழுதப்பட்ட பல ஏடுகளை அல்லது சுவடிகளை நூலால் சேர்த்துக் கட்டப்படுவதனால் அது நூல் எனப்பெயர் பெற்றுள்ளது எனவும் பொத்தல் இட்டு அந்தத் துவாரத்தின் வழியே சேர்த்துக் கட்டப்படுவதால் பொத்தகம் எனப் பெயர் வழங்கலாயிற்று எனவும் கருத்தாக்கம் பெற்றுள்ளது. இவ்விரு பதங்களும் இன்றும் வழக்கில் உள்ளன. நூல் என்பது எழுத்து என்ற கருத்திலும் பயின்று வழக்கிலிருந்துள்ளது. அதனாற்றான் தொல்காப்பியரும் பின்னர் வந்த பவணந்தியாரும் நூன் மரபு என்னும் அதிகாரத்தை வைத்துள்ளனர் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

(தொடரும்)

# அதிகாரங்களைத் தொடரும் உரிமை வழங்கும் ஆவணம்



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

## Continuing Power of Attorney

சொத்துக்கள், உடமைகளுடன் கனடாவில் வாழும் ஒரு மனிதனின் வாழ்வில் 'மரண சாசனப் பத்திரம்' (Last will & Testament) என்ற ஆவணம் எவ்வளவு இன்றி யமையாததோ அதேபோல் இன்னுமோர் ஆவணமும் சட்டரீதியாகக் கைச்சாத்திட்டு வைத்திருப்பது மிக முக்கியமானதாகும். அதனை

'அதிகாரங்களைத் தொடரும் உரிமை வழங்கும் ஆவணம்' (Continuing power of attorney)எனக் குறிப்பிடப்படும்.

துரதிர்ஷ்டவசமாக நீங்கள் ஏதாவது விபத்துகளில் சிக்குண்டோ அல்லது நோய்வாய்ப்பட்டோ நிரந்தரமாக சிந்தனை செயல்களில் எவையும் தீர்மானிக்க முடியாத நிலைமைகள் அல்லது கோமா நிலைமைகளுக்குள் தள்ளப்பட்டால் உங்களின் வீடு, சொத்துக்கள், வங்கிக்கணக்குகள், முதலீட்டுத் திட்டங்கள் யாவற்றினையும் தங்கள் சார்பில் கையாளும் முழுமையான சட்டரீதியான அதிகாரத்தினை இன்னொருவருக்கு வழங்கும் ஆவணம் என இதனைக் குறிப்பிடலாம்.



இவ்வாறு உங்கள் சொத்துக்கள் மீது நீங்கள் அதிகாரத்தினைத் தொடரும் அதிகாரம் வழங்க ஒருவரைத் தெரிவு செய்யும்போது, தங்களுக்கு நம்பிக்கைக் குரியவராக, உண்மையானவராக, சொத்தினை அழிவு நிலைக்கு எடுத்துச் செல்லாதளவுக்கு அனுபவமுள்ளவராக, பொறுப்பெடுத்துச் செய்வதில் விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும் என ஒன்ராறியோ மாகாண சட்டமாதிபதி அமைச்சகத்தின் இணையத்தளத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீங்கள் நிரந்தரமாக தெளிவற்ற நிலைமைக்கு உள்ளானால் (Incapable stage of managing property) பொதுவாக உங்களின் சொத்துக்களின் அதிகாரங்களைத் தொடரும் உரிமையினை நீங்கள் எவருக்கும் வழங்கலாம் என இருந்த போதும் குடும்பத்தில் மனைவி அல்லது கணவன் மற்றும் பிள்ளைகளுக்கே அந்த அதிகாரம் வழங்குவது மரபுரீதியான செயல்பாடாகும்.

ஏனெனில் இங்கு நடந்த ஓர் உண்மைக் கதையினை உதாரணத்துக்குச் சொல்ல வேண்டும்போல் உள்ளது.

அந்த நபர் திடீர் என விழுந்து தலை அடிபட்டு நிரந்தரமாகக் கோமா நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். மனைவியோடு கூட்டு உரிமையாளராக இருந்த அவர்கள் குடியிருக்கும் வீடு இருவரினது கையொப்பமும் இல்லாது விற்பனையும் செய்ய முடியாது. பிரதானமான நிலையிலிருந்து வருமானத்தினைக் கொண்டுவரும் கணவன் திடீர் என்று நிரந்தரமாக இயலாத நிலைமைக்குத் தள்ளப்பட்டதால் சிறுபிள்ளைகளுடன் வாழும் அந்த மனைவியும் முற்றாக மனமுடைந்து சோர்ந்த நிலைமைகள்.

இறுதியில் என்ன நடந்தது? வீடு அடமானக் கடன் மாதக் கொடுப்பனவுகள், மற்றும் மின்சார, தண்ணீர், சொத்துவரிக் கட்டணங்கள் எவையும் செலுத்தமுடியாத நிலைமையில் வீடு பறிமுதல் ஆகியிருந்தது.

இங்கு தவறு எங்கே நடந்துள்ளது?

வீட்டில் அதிகாரத்தினைத் தொடரும் உரிமையை சட்டரீதியாக மனைவியின் பெயரில் செய்து வைக்காமல்விட்டதே மிகப் பெரிய தவறாகும்.

ஆனால் இப்படியானதொரு துரதிர்ஷ்ட நிலைமை ஏற்பட்டால் நீதிமன்றம் சென்று தொடர்ச்சியான அதிகாரமுள்ள உத்தரவினைப் பெறும் சட்டமூலங்கள் குடும்பத்தில் மனைவி அல்லது கணவன் பிள்ளைகளுக்கு உள்ளது. அதனைப் பெற்றுத் தரமுடியும் என கனடாவின் சட்டத்தரணி அலுவலகங்கள் அறிவிப்பதுண்டு.

அதற்குரிய கால தாமதங்களும் செலவுகளும் தேவையற்று உருவாகும்.

'அதிகாரத்தினை தொடரும் உரிமை வழங்கும் ஆவணப் பத்திரம்' (Continuing power of attorney) அந்தநேரம் வீட்டிற்குள் இருந்துவிட்டால் பிரச்சினை இலகுவாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

# தன்னைத்தானே புரிந்து கொள்ளல்

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.premrawat.com**

பல வருட காலமாக தன்னைத்தானே அறிந்து கொள்வதற்காகப் பயணித்துக் கொண்டிருக்கும் பலரை நான் சந்தித்தும், உரையாடியும் உள்ளேன். சிலர் பரிபூரண நிறைவைக் கண்டுகொள்வதற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்துள்ளதுடன், அதற்காக உலகம் முழுவதும் உள்ள கருத்துகளையும் வழிமுறைகளையும் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். மற்றவர்கள் தங்களைத் தாங்களே மேலும் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கும், மேன்மையான தொரு மனிதனாவதற்கும் விரும்புகின்றனர் அல்லது அவர்கள் தங்களின் வாழ்க்கையில் நிறைவையும், மகிழ்ச்சியையும் மேலும் ஆழமாக அனுபவிக்க விரும்புகின்றனர்.

உங்கள் பயணத்தின் ஒரு பகுதியை என்னுடன் மேற்கொள்ளும்போது, நாம் செல்லும் இடமானது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரக்கூடும். கோட்பாடுகள் மற்றும் நம்பிக்கைகளின் எல்லைகளைக் கடந்து, தனித்துவமானதொரு அறிவை நோக்கி நாம் செல்கிறோம். தினந்தோறும் நிகழும் கவனச் சிதறல்களிலிருந்து விடுபட, உங்களுக்கு உள்ளே உள்ள ஓர் இடத்திற்குச் செல்கிறோம். தெளிவு, நிறைவு மற்றும் மகிழ்ச்சியை நாம் உண்மையாகவே அனுபவிக்கக் கூடிய ஓர் இடத்திற்கு, உள் அமைதி உள்ள ஓர் இடத்திற்குச் செல்கிறோம். நமது பாதையானது மனதை நிலைப்படுத்தி, உள்ளத்தை நிறைவு செய்து நம்மை அமைதி நிறைந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். நீங்கள் யாராக இருப்பினும், அமைதி உங்கள் உள்ளே இருக்கின்றது. தன்னை அறியும் அறிவானது அதை அனுபவிக்க உங்களுக்கு உதவுகின்றது.

தன்னைத்தானே புரிந்து கொள்ளல் என்ற தலைப்பு தொடர்பாக அறிவு சார்ந்த பலவிதமான கருத்துக்களின் இரைச்சல், இவ்வுலகில் அதிகளவில் இருப்பதை நான் காண்கிறேன். ஆனால், தன்னை அறியும் அறிவை அடைவதன் நோக்கம் மிகவும் எளிமையானது. அது நமக்குள் இருக்கும் பிரபஞ்சத்தை பிரபஞ்சம் அளவு அமைதியுடன் ஒன்றிணைவதன் மூலம் புத்துணர்ச்சியூட்டும் தெளிவு, ஆழ்ந்த நிறைவு மற்றும் ஆழமான, அளவிட முடியாத மகிழ்ச்சி உட்பட பற்பல அற்புதங்களை நாம் அனுபவிப்பது பற்றியதே. இந்த அமைதியின் உணர்வானது உண்மையில் நாம் யார் என்பதை மையமாகக் கொண்டது.

தெளிவாகச் சொல்வதானால், எனது நோக்கமானது அமைதி பற்றிய உங்கள் புரிதலை வளர்த்துக் கொள்வதற்கும், உங்கள் வாழ்வில் உங்களுள் இருக்கும் அமைதியுடன் தொடர்பு கொள்வதன் விளைவுகள் பற்றி அறிந்து கொள்வதற்கும், உதவி செய்வதாகும். ஆனால், வெளிப்புற இரைச்சலில் இருந்து உள் அமைதிக்கான உங்கள் பயணத்தை நீங்கள் மட்டுமே மேற்கொள்ள முடியும். உங்களுக்கு எவராலும் அமைதியைக் கொடுக்க முடியாது. உங்களுக்காக, உங்களுக்குள், உங்களால் மட்டுமே அதைக் கண்டுகொள்ள முடியும். அவ்வாறு செய்யும்போது, "நீங்கள் யார்?" என்பதை முற்றிலும் புதிய வழிகளில் நீங்கள் புரிந்து கொள்வீர்கள். நம் வாழ்வில் தாமாகவே நிகழும் பல விடயங்கள் உள்ளன. இவை நமக்கு எளிதாக நடைபெறும் விடயங்கள். ஆனால், உள் அமைதியைக் கண்டறிவதற்கு இடைவிடாத முயற்சி தேவைப்படுகிறது. பூரண விழிப்புணர்வுடன் இருப்பதற்கு முயற்சி தேவைப்படுகிறது. ஐன்ஸ்டீனின் கூற்றுப்படி, "விவேகமானது வாழ்நாள் முழுவதும் செய்யும் முயற்சியின் விளைவேயன்றி ஏட்டுக் கல்வியினால் வரும் விளைவு அல்ல."



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை
மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
**படித்ததில் பிடித்தது**
அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## இதுதான் உண்மை

1. மகனின் மாற்றத்தைத் திருமணத்திற்குப் பின் உணரலாம்.
2. மகளின் மாற்றத்தை வாலிப வயதில் உணரலாம்.
3. கணவனின் மாற்றத்தை மனைவி நோய்வாய்ப்படுதலில் உணரலாம்.
4. மனைவியின் மாற்றத்தை கணவனின் வறுமையில் உணரலாம்.
5. நண்பனின் மாற்றத்தை கஷ்ட காலத்தில் உணரலாம்.
6. சகோதரனின் மாற்றத்தை சண்டையில் உணரலாம்.
7. சகோதரியின் மாற்றத்தைச் சொத்துப் பரிமாற்றத்தில் உணரலாம்.
8. பிள்ளைகளின் மாற்றத்தை நமது முதுமைக் காலத்தில் உணரலாம். - கார்த்திகேயினி



**சிலசமயம் அழகிய தருணங்கள் எதிர்பார்த்து வருவதில்லை. காதல் என்பதும் அப்படிப்பட்டதுதான். என்றுமே எதிர்பார்ப்புகள் நிறைந்து எதிர்பாராமல் நிகழ்வது...**

**Happy Valentine's Day**

# கவியரசு கண்ணதாசன் பார்வையில் புத்தாண்டும், புதிய தைப்பாவையும்



K. ANANTHANATHAN,
MA, MSW, RSW (Registered Social Worker with OCSWSSW)
kananthan2003@gmail.com

ஒவ்வொரு புத்தாண்டின்போது கவிஞர்களின் வாழ்த்துரையும், அறிஞர் பெருமக்களின் வாழ்த்துரையும், அரசியல் தலைவர்களின் வரவேற்புரையும் ஏடுகளிலும், தொலைக்காட்சிகளிலும், தற்போது யூடியூப் சேனல்களில் வருவதும், அதைப் படித்து, கேட்டு மகிழ்வதும் எமக்கு வாடிக்கையான ஒன்றுதான்.

காலமெல்லாம் கவியரசு கண்ணதாசன் என்பதற்கேற்று அவரது பார்வையில் புத்தாண்டும், புதிய தைப் பாவையும் என்ற கட்டுரையில் இந்த ஆண்டையும் ஆரம்பிப்போம்.

எம்மைக் கடந்து சென்ற ஆண்டில் நிகழ்ந்த நன்மைகளை நினைத்து மகிழ்வதும், நடைபெற்ற துயரங்களை எண்ணி வருகின்ற வருடத்தில் அவை நிகழாவண்ணம் இருக்க பிரார்த்தனை செய்வதும் வழக்கமான ஒன்றுதான்.

உலகில் நல்லதும், கெட்டதும் மாறி, மாறி ஒவ்வொரு ஆண்டும் வந்துபோவது இயல்புதான். இந்நிலையினைக் குறிக்கும் வகையில் எல்லாப் புத்தாண்டுக்கும் பொருந்தும்வகையில் கவியரசு கண்ணதாசன் எழுதிய சிறப்பான கவிதையை உங்கள் பார்வைக்கு இங்கு தருகின்றேன்.

## துயரங்கள் தொலைக!

சோதனைகள் மறைக! வந்த மக்கள் நயனங்கள் உலகில் உள்ள நலங்களை காண்பதாக! கயவர்கள் ஒழிக! நாட்டில் காவலர் வாழ்க! வளர்க! சுயநலம் இல்லதாக்கி தொடங்கட்டும் புதிய ஆண்டு! ஆண்டுகள் வந்து போகும். ஆயினும் கடந்த ஆண்டில் மாண்டவர் வருவதில்லை மானிடச் சாதிக்காக வேண்டினேன். இந்த ஆண்டில் மேன்மையோர் சாவை வெல்க கண்டகு சிறப்பில் எங்கள் 'கனித் தமிழ்நாடு வாழ்க' என்று தனது கவிதையை நிறைவு செய்கிறார் கவியரசு கண்ணதாசன்.

இந்தக் கவிதையில் கடைசி வரிகள் தமிழ்நாடு வெல்க! என்று முடித்திருக்கிறார் கவியரசு கண்ணதாசன். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்று மகாகவி பாரதியார் வர்ணித்ததைப்போல கவியரசு கண்ணதாசனும் 'கனித்தமிழ்நாடு' என்று போற்றித் தமிழ்நாட்டின் பெருமையை உயர்த்திப் பிடிப்பது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல சிந்திக்கக் கூடியதும் ஆகும்.

## புதிய தைப்பாவை

தை மாதம் பிறந்து விட்டாலே கிராமங்கள் எல்லாமே மணக்க ஆரம்பித்து விடும். அந்த மண் வாசனைக்கு நிகரான எதுவும் இல்லை என்று சொல்லலாம். அநேகமாக எல்லா வீடுகளிலுமே புதிதாக வயற்காட்டிலே இருந்துவந்த நெற்குளியலின் மணம் ஒரு பக்கம், அவற்றைப் பதர் நீக்கி அரிசி ஆக்கி குவித்து வைத்திருக்கும் மணம் இன்னொரு பக்கம். மஞ்சள், இஞ்சி, கரும்பு இவைகளின் மணமும், பசு நெய் மணமும் ஏலக்காய், முந்திரி உலர் திராட்சை மணமும், வீட்டை சுத்தம் செய்து வெள்ளை அடித்த மணமும், வாசலில் பரங்கிப் பூவை நடுவிலே வைத்து போட்ட கோலங்களில் மணமும் அனைத்தும் வீசிக்கொண்டே இருக்கும்.



இந்த மணத்தை எல்லாம் வேறு எந்தப் பண்டிகையிலும் காண முடியாது. நுகரவும் முடியாது, பொங்கல் பண்டிகை முடிந்த பின்னும் அந்த ஒருவகை நறுமணம் தை மாதம் முழுக்க தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். அதுதான் தைப்பொங்கல் பண்டிகைக்கும், மற்ற பண்டிகைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம். இன்னும் பலஇடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன. வீர விளையாட்டுகளுக்கும் பஞ்சமில்லை. குறிப்பாக ஜல்லிக்கட்டும், மஞ்சு விரட்டும் தமிழ்நாடெங்கும் நடைபெற்று, எமது தமிழ்ப் பாரம்பரிய பெருமையை பறை சாற்றுகிற நிகழ்வுகளை தொலைகாட்சியில் பார்க்கும்பொழுது உள்ளபடியே உள்ளம் பூரித்துப் போகிறது.

இந்தப் பெருமைகளை, எல்லாம் கவியரசு 'தைப் பாவை" என்ற தலைப்பில் ஏற்கனவே எழுதி ஒரு காவியமே படைத்திருக்கிறார். உழவின் பெருமை, தமிழின் அருமை, மூவேந்தர்களின் வீரம், களிப்பு மிகு கணவன் மனைவி கூடல், கலவி மயக்கம், கன்னியரின ஏக்கம், இயற்கை வனப்பு என்று தமிழரின் பண்பாட்டினை, கலாசாரத்தை பிடித்து எழுதிய பாங்கினை கேட்டும் படித்து மகிழ்ந்திருக்கிறேன்.

அந்த தைப் பாவையில் சொல்லாமல் விடுபட்டுப்போன ஒன்று இரண்டு செய்திகளை உள்ளடக்கி 'புதிய தைப் பாவை' என்ற தலைப்பிலே ஓர் அருமையான கவிதையினை எமக்கு வழங்கி இருக்கிறார் கவியரசு கண்ணதாசன், அதைத்தான் இக்கட்டுரையில் பார்க்க இருக்கிறோம். தைப் பொங்கல் சுவையோடு கவியரசர் கண்ணதாசன் தரும் புதிய தைப் பாவையின் இலக்கிய சுவையினையும், சூடு தணியாமல் சுவைத்து மகிழ்ந்திடுவோம். மார்கழித் திங்களுக்கு விடை கொடுத்து விட்டு புலர் காலைப்பொழுதில் பூக்கள் மலர்ந்திருக்க, மென்பனி படர்ந்திருக்க, புன்னகையோடு புறப்பட்டு வருகின்ற, 'தை மகளே வருகவென' தனது கவிதையினை தொடர்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

தைத் திருநாளை பெண்ணாகவே உருவகப்படுத்தி கொஞ்சிக் குலவி மகிழுகிற குற்றாலத் தமிழில் வர்ணித்து மகிழ்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

"தையால் வருக! மணித் தாமரைப் பூந்தேவியினை கையில் அணைத்து மலர் கன்னத்தே கோலமிட்டு, நெய்யார் குழல் நீவி நித்திலம் பூம்பட்டுடுத்தி, மையால் விழி எழுதி மலர்ஞ்சரங்கள் கொலுவிருத்தி மெய்யார் முத்தமிட்டு விளையாடுஞ் சலங்கை கட்டி, பொய்யாத செந்தமிழின் பூங்கவிதைபோல் வடித்து, செந்தாரந்த பச்சை செழுமையெலாம் காண எனை வையாய் கனிக்கொடியாய் வந்தருள்வாய் தைப்பாவாய் என்று தாமரைப் பூவிலே குடியிருக்கும் மகாலட்சுமியாகவே பார்த்து மகிழ்கிறார் கவியரசு கண்ணதாசன் ஏனென்றால் வீட்டிலே செல்வம் நிறைந்திருக்கும் காலம் அது. நெய் மணக்கும் கூந்தலை சீவி முடித்து அதிலே மலர்ச்சரங்கள் சூட்டி, கண்ணுக்கு மையெழுதி, காதுக்கு சலங்கைகளைக் கட்டி கூட்டமைப்போடு விளங்குகின்ற செந்தமிழ் கவிதை போல் வடிவமைத்து அழகு பார்க்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

அப்படிப்பட்ட தை மகளே நீ எங்கள் வீட்டிற்கு வரும்பொழுது பசுமை படந்திருக்கும் செழுமைமையைக் கொண்டு வருவாய். அதைக்கண்டு மகிழும் அளவுக்கு கனியொடு வந்து எனக்கு அருள் புரிவாய் தை மகளே என்று வரவேற்று மகிழ்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

அடுத்த கவிதையை, மணமுடிக்க ஏங்குகிற பருவ மங்கையின் விரக தாபத்தை வெளிப்படுத்துகிற கவிதையாய் வடிவமைத்திருக்கிறார் கவியரசு கண்ணதாசன்.

நீளமான கூந்தலுடைய அந்தப் பெண்ணின் ஏக்கம் செங்கற் குளையிலே இருந்து சூடும் புகையுமாக வருவதுபோல அவளது உள்ளம் பெருமூச்சால் பொங்கி வழிகிறதாம். அதனால் பாளம் போன்ற தொடைகளிலே வியர்த்துக் கொட்டுகிறதாம். தாளக் கருவிகள் ஒலி எழுப்புவதுபோல அவளது இதயம் படபடவென்று துடிக்கிறதாம். அப்படிப்பட்ட அந்தப் பேதைப் பெண்ணின் மனதைக் குளிரும்படி செய்திட அவளுக்கேற்ற கணவன் அமைந்திடவும், சுகம் பெறவும் அருள் புரிவாய் தைப் பாவாய் என்று கன்னிப் பெண்ணின் ஏக்கத்தை கவிதையாக்கி இருக்கிறார் கவியரசு கண்ணதாசன்.

நீளப் புரந்தகுழல் நெளிபானுமில்லாமல்
சூளையிடு செங்கல் சுடும்புகைபோல் மூச்செறிந்து
பாளத் தொடைகள் பசிந்து வியர்பெருக்கி
தாளம் நரம்பெங்கும் நலத்தின் நினைவுருக்கி
மாளத் தொலையாத மயக்கத்தில் உழல்வார்கள்
தாளம் படும்பாடு தாம்படுமோர் பேதையர்க்கு
நாளொன்று பார்த்து நற்பொழுதில் கைகொடுக்கும்
ஆளன்வர அருள்வாய் அன்புருவே தைப்பாவாய்...

அடுத்த பாடல் ஓலைக் குடிசையிலே குடியிருக்கும் ஏழைகளின் வீட்டிலும் பொங்கல் பொங்க வேண்டும். அவர்கள் வீட்டு அடுப்படியில் பூனையை தூங்க வைத்து விடாதே தைப்பா வாய். ஆலையிலே கதவடைப்பு நடந்தால் அவர்கள் எங்கே போவார்கள். படித்தால் மட்டும் போதுமா? அவர்களுக்கென்று ஒரு வேலை வேண்டாமா? இந்த நேரத்தில்தான் வசதியுள்ளோர்கள், மனந்திருந்தி, வறியோர்க்கு உதவிட வேண்டும். அவர்களுடைய பார்வை ஏழை மக்களின் பக்கம் திரும்ப வேண்டும். அதன் காரணமாக அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் வெளிச்சம் வர வேண்டும். மற்றவர்களின் வீட்டில் எப்படி பால் பொங்குகிறதோ அப்படிப் பாற்கஞ்சி வார்ப்பதற்கு நீதான் அருள வேண்டும் தைப்பாவாய் என்கிறார் கண்ணதாசன்.

ஆலை அடைத்ததென அடுப்படியிற் பூனை வர
ஓலை குடிசையிட உழல்வார்க்கும் கண் திறவாய்
வேலை, தொழிலின்றி வெறுங்கல்வி கற்றவர்க்கும்
சாலை பயணத்தே தயங்கும்மணி மைந்தருக்கும்
பாலை அருளிப் பசி தீர்க்க வழி காட்டு...
ஏலார்... இயலார்... இருப்பும் வரவுமன
சோலைக் குடியமைக்கும் சுயநலத்தார் மனந்திருந்தி
பாற்கஞ்சி வார்க்க பணித்தருள் வாய் தைப்பாவாய்...

என்பதே அப்பாடல்..
அமுதம் கிடைத்தாலும் அதைத் தனியே உண்ணாமல் பகிர்ந்து உண்பதே தமிழர் பண்பாடு என்பதையும் புகழுக்காக உயிரையும் கொடுப்பான் தமிழன்... பழியென்றால் உலகையே தருவதென்றாலும் ஒப்பமாட்டான் என்னும் கருத்தினை உள்ளடக்கிய, கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எழுதிய உண்டால் அம்ம இவ்வுலகம் எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை இக்கவிதை நினைவுப்படுத்துகிறது.

துன்பம் இலா உலகம் சோதனை இல்லாத மனை
அன்பின் வழியே இன்பம் பிறக்கும்
அறம் புரக்கும் நல்மனம் என வழங்கும் ஈவுடையோர்
தன்பாற் பொருளை சம உடமை ஆக்க வரும்
பொன்போற் குணங்கள் புகழுக்கே உயிர்கொடுப்பார்
என்பான் தமிழுக்கு இலக்கணமாய் வாழ்வோரை
நின்பால் அணைத்து நீள் கழுத்தில் மாலையிட்டு
என்போடு சேர்க்க எழுந்தருள்வாய் தைப்பாவாய்

என்று புதிய தைப் பாவைக் கவிதையை முடிக்கிறார் நமது கவியரசர் கண்ணதாசன். மக்கள் வாழ்வில் துன்பம் இல்லாத நிலையும், அன்பின் வழியே பயணிக்கும் நல்மனமும் கொண்டு தனது பொருளை அடுத்தவருக்கு ஈகின்ற கொடையுள்ளமும் கொண்ட எல்லோருக்கும் இலக்கணமாய் வாழ்வதற்கு நீதான் இங்கு வந்து எழுந்தருள வேண்டும்மென தை மகளை வேண்டுகிறார் கண்ணதாசன்.